இதழ்–40

01.01.2022

# தூமி

பல்சுவை மின்னிதழ்



பெருவெள்ளத்திற்கான பயணம்

# உலகின் தலைசிறந்த சொல் செயல்!




வாழ்க்கையை அர்த்தப்படுத்தும் சபதங்கள் எமது வாழ்க்கையை மேலும் சுவாரசியப்படுத்துவனவாகவும் உள்ளன.

பலரும் புத்தாண்டுகள் ஆரம்பிக்கும் போது தாம் கடந்த காலங்களில் பின்பற்றிய தவறான பழக்கங்களை நீக்குவதாகவும், மேலும் சிலர் புதிய சில பழக்கங்களை உருவாக்கி கொள்வதாகவும் சபதங்களை மேற்கொள்வதும் இயல்பான மனித நடத்தையாக உள்ளது. மறுவலத்தில் எடுத்த சபதங்களை கடைப்பிடிப்போராய் வெகுசிலரே காணப்படுவார்கள். பலரும் சபதம் மேற்கொண்ட அன்றைய தினமே அதனை முடித்து கொள்ளும் நிகழ்வுகளும் இயல்பான நிகழ்வுகளாகவே காணப்படுகிறது.

எடுத்தவுடனேயே பெரிய சபதங்களை எடுத்து விடாதீர்கள். படிப்படியான சிறிய சிறிய சபதங்களாக அவற்றை எளிமைப்படுத்துங்கள். எறும்பூர கல்லும் தேயும்.

சப்தங்கள் எடுக்க முதல் இரண்டு கேள்விகளுக்கான விடைகளை நீங்களே தேடிக்கொள்ளுங்கள்
.

1. ஏன் இது எனக்கு முக்கியமானது?
2. எப்படி இந்த சபதத்தை நிறைவேற்றுவது?
(படிநிலை ரீதியான தெளிவு)

இந்த இரண்டு கேள்விகளுக்குமான விடையை அறிந்த பின்னரே சபதம் எடுங்கள். விடை காண முடியவில்லையா?
அந்த சபதங்கள் உங்களுக்கு சாத்தியமில்லாதவை. சத்தம் போடாமல் விட்டு விடுங்கள்.

மாற்றங்களை உள்வாங்கும் ஒரு சிலரிடம் எமது கோரிக்கையாய் அமைவது, உங்களுடன் இணைத்து மாதமொருமுறை இன்னுமொருவரை வாசிப்பு நேசனாக்க சபதம் எடுங்கள். எம் சமூகத்தின் போக்கை சீராய் அலசுவோர் பலரும் நம் மந்த நிலைமை தொடர்பில் ஆழமான கவலையை வெளிப்படுத்தி வருகிறார்கள். இம்மந்த கதியை கலைவதாயின் ஆற்றல்மிக்க சமூகத்தை உருவாக்க வேண்டும். அதற்கான முதற்படியாய் வாசிப்புமிக்க சமூகத்தை உருவாக்க நீங்கள் அடியெடுத்து வையுங்கள்.

**இரண்டுகளின் சேர்க்கையாக பிறந்திருக்கும் ஆங்கிலப்புதுவருடம் இருட்டுகளை பிரிகையாக்கி எல்லோருக்கும் சம்பூரண சௌபாக்கியம் தர வேண்டுமென வாழ்த்துகிறோம்.**



www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

துமி பல்சுவை மின்னிதழ்

ஆசிரியர்
ச. சந்தோஷன்

இணை ஆசிரியர்கள்
ஐ.வி. மகாசேனன்
இ. வினோஜன்

திறனாய்வாளர்கள்
கு. கீர்த்தனன்
த. அபிவர்ணா

வடிவமைப்பாளர்
வ. குணநீதன்

செய்தியியலாளர்
ந. மயூரன்

## இவ்விதழில் துமித்தவை...

04 சி.வை. தாமோதரம்பிள்ளை
08 பாடம் சொல்கிறது பட்டாசு!
11 சித்திராங்கதா
16 ஐயப்பன் விரதமும் இளைஞர்களின் வகிபங்கும்
19 பரிசும் தண்டனையும் அவனுக்கே!
21 ஈழச்சூழலியல்
25 குறுக்கெழுத்துப்போட்டி
26 24 வருடங்கள்
30 ஐஸ்கிறீம் சிலையே நீ யாரோ?
35 முன்பள்ளி மாணவர்களின் மொழித்தேட்டம்
38 சிங்ககிரித்தலைவன்
40 மீண்டும் சம்பியனான யாழ்ப்பாணம்





**சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்களின் 121ஆவது நினைவு தினம் 01.01.2022 அனுட்டிக்கப்படுவதை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது.**

*யோகேஸ்வரி சிவப்பிரகாசம்*

# தமிழின் புதையல் காத்த பெருமகன் சி.வை. தாமோதரம்பிள்ளை

தமிழ் மொழியின் அரும்பெரும் புதையல்களை அழியாது மீட்டெடுத்து காத்து தமிழ் வளர்த்த தாமோதரம்பிள்ளை சிறுப்பிட்டியில் பிறந்தவர். வைரவநாதபிள்ளைக்கும் பெரும்தேவி அம்மையாருக்கும் தலைமகனாக 12.09.1832 அன்று ஜனனமானார். இவரது தந்தையார் பாடசாலைப் பரிசோதகராக பணியாற்றியவர். இவருக்கு ஆறு சகோதரர்கள் இருந்தனர்.

பிள்ளை அவர்கள் தந்தையாரிடமே ஆரம்பக்கல்வியைக் கற்றார். தொடர்ந்து சுன்னாகம் முத்துக்குமாரு கவிராயரிடம் இலக்கண இலக்கியங்களைக் கற்றறிந்தார். இதன் பின் அமெரிக்க மிஷனரி தெல்லிப்பளையில் நடத்திய ஆங்கிலக் கலாசாலையில் சில ஆண்டுகளும் வட்டுக்கோட்டையில் நடத்திய கலாசாலையில் எட்டு ஆண்டுகளும் கல்வி பயின்றார். கோப்பாய் போதனாசக்தி வித்தியாசாலையில் ஆசிரியராக பணியாற்ற ஆரம்பித்தார். அவ்வேளையில் இந்தியாவில் பேர்சிவல் பாதிரியார் தாம் நடத்தி வந்த தினவர்த்தமானி பத்திரிகைக்கு ஆசிரியராக வருமாறு



பிள்ளைக்கு வேண்டுகோள் விடுத்தார். தாமோதரம்பிள்ளை அவர்களும் அதனையேற்று பத்திரிகையாசிரியராகப் பணியாற்றத் தொடங்கினார்.

ஓய்வாக இருந்த நேரங்களில் ஆங்கிலேயர்களுக்கு தமிழை கற்பித்தார். பெரும் பதவிகளில் இருந்தவர்களும் இவ்வாறு தமிழ் கற்று அவரது திறமையை இனங்கண்டதால் சென்னை இராசதானிக் கல்லூ ரியின் தமிழாசிரியர் பதவி அவரைத் தேடிவந்தது. அப்பதவியை அவர் ஏற்றார்.

அங்கு ஆசிரியப்பணி தொடர் கையில் சென்னை சர்வகலா சாலை நிறுவப்பட்டது. சர்வகலா சாலைக்கல்வியை பிள்ளையின் மனம் நாடியது. புகுமுகத்தேர்வில் சித்தியடைந்து கல்வியைத் தொடர்ந்து



பட்டமும் பெற்றார். கள்ளிக்கோட்டை அரசினர் கல்லூரியில் ஆசிரிய நியமனம் கிடைத்தது. அங்கு அவர் காட்டிய திறமையை மேலதிகாரிகள் பாராட்டினர். பிள்ளையிடம் தமிழ் சுற்ற லஸ்சிங்டன் துரை அவரது திறமையை உணர்ந்து சென்னை மாகாணத் தலைமைக்கணக்காளர் பதவியில் அவரை அமர்த்தினார். சட்டத்தை கற்க முற்பட்ட தாமோதரம்பிள்ளை அவர்கள் 1871ல் B.L பட்டத்தைப் பெற்றார். வழக்கறிஞராக தொழில்புரிந்த அவர் 1887ல் புதுக்கோட்டைச் சமஸ்தான நீதிபதியாக நியமிக்கப்பட்டார். அவரது அசாதாரண திறமைகளை அவதானத்திற் கொண்ட அரசினர் 1875ல் ராவ்பகதூர் பட்டம் வழங்கி அவரைக் கௌரவித்தனர்.

இவ்வாறு பல்வேறு பதவிகளை வகித்துத் திறமையாக அத்துறைகளில் பணியாற்றிக் கொண்டிருந்தபோதும் பிள்ளையவர்களின் சித்தம் தமிழின் பால் கவனம் கொண்டதாகவே இருந்தது. ஆங்கிலேயரின் ஆட்சி நடைபெற்றதால் ஆங்கிலம் கற்றோரே முன்னேறினர். மதிக்கப்பட்டனர். தமிழைக் கற்க வேண்டும் என்ற ஆர்வம் நலிவடைந்தது. தமிழிலக்கிய இலக்கண நூல்கள் ஏடுகளாக இருந்த காலம் அது. வெவ்வேறு தமிழறிஞர் கள் எழுதிய ஏடுகளில் பாடபேதங்கள் காணப்படுவது இயல்பான ஒன்று. எடுகள் காலஞ்செல்லச் செல்லச் சிதைவடைய ஆரம்பிக்க நூ லின் பல பாகங்கள் மெல்ல மெல்ல அழிவடையத் தொடங்கின. ஆங்காங்கே அருமையான ஏடுகளைப் பாதுகாத்து வந்தோரும் கொடுத்தால்


நூல் மீண்டும் கிடைக்காமற் போய் விடும் என்றஞ்சி அவற்றை எவருக்கும் கொடுக்க மறுத்தனர். இக் காரணங்களால் அரும்பெரும் தமிழ் நூல்கள் காணக்கிடைக் காதவையாகவும் அரிதான முழுமையான நூல்களைப் பெற்றுக் கொள்ள இயலாத நிலையும் ஏற்பட்டுக்கொண்டிருந்தன. இதை பிள்ளை அவர்கள் அவதானித்து வேதனைப்பட்டுக் கொண்டிருந்தார்.

தமிழின் அரிய பொக்கிஷங்களை பாதுகாக்க இயன்ற பணியை செய்ய வேண்டுமென உறுதி பூண்டார். தாம் சென்ற இடங்களிலெல்லாம் பழைய ஏடுகள் கிடைக்குமா என விசாரித்து அவற்றைச் சேகரித்தார். கிடைத்தவற்றைப் படித்துச் சரியாக உள்ளதா எனப்பார்த்தார். கிடைத்த சுவடிகளை ஒப்பு நோக்கி பாடபேதங்களை ஆராய்ந்து பல அறிஞர்களின் கருத்தறிந்து சீராக்கினார். அப்படிச் சீர் செய்தவற்றை அச்சேற்றினார். அன்று அச்சேற்றுவதும் ஒரு கடினமான பணியாக இருந்தது. பெரும் சிரமங்களைக் கடந்து பிள்ளையவர்கள் இடையறாது முயன்று நூல்களை அச்சிட்டு வெளிக்கொணர்ந்தார்.

நீதிநெறி விளக்கவுரையை தாமோதரம்பிள்ளை அவர்கள் தனது இருபதாவது வயதில் வெளியிட்டார். பின்னர் தொல்காப்பியம் சொல்ல திகாரம் சேனாவரையர் உரை (1868), வீரசோழியம் (1881), திருத்தணிகைப் புராணம் (1883), இறையனார் அகப்பொருளுரை (1883), தொல்காப்பியம் பொருளதிகாரம் நச்சினார்க்கினியர் உரை (1885), கலித்தொகை (1887). இலக்கண விளக்கம் (1889), சூளாமணி (1889), தொல்காப்பியம் எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியர் உரை (1891). தொல்காப்பியம் சொல்லதிகாரம் நச்சினார்க்கினியர் உரை 1892) ஆகிய நூல்களை அச்சேற்றினார்.

கட்டளைக் கலித்துறை, சைவ மகத்துவம், வசனசூளாமணி. நட்சத்திர மாலை, ஆறாம் வாசகப் புத்தகம், ஏழாம் வாசகப் புத்தகம், ஆதியாகம் கீர்த்தனம், விவிலிய விரோதம், காந்த மலர் அல்லது கற்றபின் காமாட்சி என்பன அவரே எழுதிய நூல்களாகும்.

தாமோதரம்பிள்ளை அவர்கள் வள்ளியம்மை என்னும் பெண்ணைத் திருமணம் செய்து இரு பிள்ளைகளுக்கு தந்தையானார், வள்ளியம்மை நோயுற்று காலமானதால் அவரது சகோதரி நாகமுத்தம்மாளை 1860ஆம் ஆண்டு கரம் பற்றினார். இவர்களுக்கு கனகரத்தினம்பிள்ளை, அமிர்தலிங்கம்பிள்ளை. பொன்னம் மாள் சோமசுந்தரம்பிள்ளை. அழக


யா. கூ. த. நூ. ப. வி. க. வெளியீடு-11.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

தாமோதரம்

இராவ் பகதூர்

சி. வை. தாமோதரம்பிள்ளை B. A., B. L.

அவர்கள்

தாம் பதிப்பித்த நூல்களுக்கு எழுதிய

பதிப்புரைகளின் தொகுப்பு

வெளியீடு :

யாழ்ப்பாணம் கூட்டுறவுத் தமிழ்நூற் பதிப்பு விற்பனைக் கழகம்

411/1 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்;


தொல்காப்பியம்.

பொருளதிகாரம்.

நச்சினார்க்கினியர்

சி. வை. தாமோதரம்பிள்ளையால்

Copyright Registered.

சுந்தரம், சிவ பாக்கியம், ஆகிய அறுவர் மக்கட்செல்வங்கள்.

சின்னத்தம்பிப்பிள்ளை, அப்புக்குட்டிப் பிள்ளை, இளைய தம்பிப்பிள்ளை, சின்னக்குட்டிப்பிள்ளை, சின்னப்பா பிள்ளை, நல்லதம்பிப்பிள்ளை ஆகிய ஆறுபேரும் தாமோதரம் பிள்ளையின் சகோதர் ஆவார்.

பிள்ளையவர்கள் ஏடுகளை ஆய்வு செய்வதில் முழுமையாக ஈடுபட இயலாது நோயுற்றார். மற்றையோரின் உதவிபெற்றும் செயற்பட முடியாத நிலையில் பணியைத் தொடரமுடியாது போனதால் அகநானூறு போன்ற நூல்களை அவரால் வெளியிட முடியாது போய்விட்டது.

நூற்றாண்டின் ஆரம்பநாளான 01.01.01 (1901) அன்று பிள்ளையவர்கள் மறைந்தார்.

## செய்தித் துளிகள்

● உலகின் முதல் குறுஞ்ச்செய்தியான "Merry Christmas" வோடபோன் நிறுவனத்தினால் 107000 யூரோக்களுக்கு ஏலத்தில் விற்க்கப்பட்டுள்ளது.




● கத்திக்குத்து தாக்குதலில் இருந்து தப்பிக்கும் வகையிலான டீ-ஷேர்ட்டுக்களை இங்கிலாந்தை சேர்ந்த பி.பி,எஸ்.எஸ் ஆயுத உற்பத்தி நிறுவனம் தயாரித்துள்ளது. இந்த சிறப்பு டி-ஷர்ட்டை தயாரிக்க கார்பன் பைபர் பயன்படுத்தப்பட்டுள்ளது.

● பூமியானது 50 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததை விட தற்போது வேகமாக சுழன்று கொண்டிருப்பதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். பூமி சூரியனை ஒரு முறை சுற்றி வருவதற்கு 365 நாட்களை எடுத்துக்கொள்கின்றதுடன், தன்னைத்தானே சுற்றிக்கொள்வதற்கு 24 மணி நேரம் செல்கின்றது. இந்த நிலையில், பூமி தற்போது 50 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததை விட வேகமாக சுழன்று கொண்டிருப்பதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். அதாவது சுழலும் வேகத்தில் ஒரு வினாடி மாறுபாடு இருப்பதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். பூமியின் மையப்பகுதி, பெருங்கடல்கள், வளிமண்டலத்தின் இயக்கம் மற்றும் சந்திரனின் ஈர்ப்பு விசை ஆகிய பல்வேறு காரணங்களால் பூமியின் சுழலும் வேகத்தில் மாற்றம் ஏற்படுவதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

# பாடம் சொல்கிறது பட்டாசு!

கொண்டாட்டத்திற்கான உலகப் பொதுமொழி எதுவென்று கேட்டால் அது வானவேடிக்கைகளாகத்தான் இருக்கும். விளையாட்டின் வெற்றிகள் ஆகட்டும், அரசியல் கொண்டாட்டங்கள் ஆகட்டும், மத ரீதியான வழிபாட்டுக் கொண்டாட்ட முறைகள் ஆகட்டும் எங்கும் பார்ப்பவர்களை பரவசப்படுத்துவது வானவேடிக்கைகள் தான். மற்றைய நாட்களில் தரையிலே நடப்பவற்றை வேடிக்கை பார்த்த கண்களை வானை நோக்கி வேடிக்கை பார்க்க வைத்த பட்டாசுகளின் ஒருவகை தான் இந்த வானவேடிக்கைகள். எதிர்பாராமல் நடக்கும் சம்பவங்கள் தான் வியத்தகு கண்டுபிடிப்புக்களை கண்ணொதிரே கொண்டு வரும். பட்டாசுகள் உருவான கதையும் அந்த எழுதப்படாத விதிக்குள் அகப்பட்டே நடந்தது.

தரமற்ற பொருட்களின் தாய்வீடு என்று எகத்தாளமாக உலகம் கேளி செய்யும் சீனாவில்த்தான் உலகத்தின் கேளிக்கைகளுக்கு படையலாகும் பட்டாசுகளும் உருவாகின. உப்பில்லாப் பண்டம் குப்பையிலே என்பது உள்ளூர்ப் பழமொழி மட்டுமல்ல, உலகப் பழமொழியும் தான். பண்டைய சீனர்களிற்கு உணவுப் பஞ்சம் இருந்தாலும் உணவில் உள்ள உப்பில் பஞ்சம் இருக்காது. அந்த உப்பில் பொட்டாசியம் நைட்ரேட்டுக்கு பஞ்சம் இருக்காது. அன்றொரு நாள் ஒரு வீட்டில் அடுப்பில் அவிந்து கொண்டிருந்த கறிக்கு அள்ளி வீசிய உப்பில் கறிச்சட்டிக்குள் விழாமல் தப்பியவை அடுப்பின் நெரிப்பில் அகப்பட்டுக் கொண்டன. என்ன அதிசயம்? உவர்க்கும் உப்பு தீ சுவாலையுடன் ஒளிர்ந்தது!

ஆச்சரியப்புள்ளிக்கு முற்றுப்புள்ளி வைக்காமல் காற்புள்ளி வைத்து ஆராய்ச்சியை தொடர்ந்தனர் சீனர்கள். கடலின் கட்டிதானே உப்பு! அது ஏன் ஒளிர்ந்தது? உப்பு ஒளிர்ந்ததா? உப்பில் இருந்தது ஒளிர்ந்ததா?




புகைப்படப்பிடிப்பாளர்:~ டிலக்ஷன் புவிராஜ்

தப்பாகிப் போகவில்லை அவர்களது ஆராய்ச்சி. சீனாவில் சனத்தொகை அதிகம். அதுபோல சீன உப்பில் பொட்டாசியம் நைட்ரேட் அதிகம். அந்த ஒளிச்சுவாலையின் இரகசியம் இந்த இரசாயனத்தில்த்தான் இருக்கிறது என்பதை கண்டறிந்து விட்டார்கள்.

வேடிக்கையாக தொடர்ந்த ஆய்வுகள் உலகத்திற்கே வேடித்கை காட்ட தொடங்கின. வித விதமான பட்டாசுகள் வித்தியாசமான முறையில் அறிமுகப்படுத்தப்பட்டன. ஈக்குடன் இணைத்த போது அது வானத்தில் பறந்தது. சிறிது நேரத்தில் அந்தரத்தில் வெடித்து வர்ணஜாலம் போட்டது. சீன வான் பரப்பில் தற்காலிக கோலம் போட்ட வான வேடிக்கைகள் முழு உலக வான் பரப்புக்களையும் வர்ணஜாலத்திற்குள் வசப்படுத்தின.

காலிமுகத்திடலிலும் இவ்வாறாக நடந்த ஒரு வானவேடிக்கைக் காட்சியில் நடந்த வேடிக்கையைத்தான் அட்டையில் காண்கிறீர்கள். திகதிகள் மாறுவதால் எதுவுமே மாறாது என்று தெரிந்திருந்தும் புத்துணர்ச்சி பெறுவதற்காக வரவேற்கப்படும் புத்தாண்டுக் கொண்டாட்டத்தின் புகைப்படமே அது.

பட்டாசுகளின் ஜாலத்தை மட்டுமா இந்த அட்டைப்படம் காட்டுகிறது? வாழ்க்கையின் கோலத்தையே காட்டுகிறது என்கிறார்கள். என்னென்ன சொல்கிறார்கள்... வாருங்கள்! கேட்போம்...!

“கடவுள் தந்த கண்களால் கண்குளிர காணாமல் கமராக் கண்களால் எல்லாவற்றையும் சிறைப்படுத்திவிட முனையும் இன்றைய இளம் தலைமுறையின் பிரதிநிதியாம் அந்த தந்தை. புத்தாண்டு தரும் அந்த புதுத் தென்றலை நுகராமல், புத்தாண்டின் புத்துணர்ச்சியை உணராமல், வான வேடிக்கைகளின் வர்ணஜாலத்தை ரசிக்காமல் புகைப்படம் எடுக்கிறார் தந்தை. அந்தக் கணத்தை அனுபவிக்கத் தெரியாதவராக தோற்றுப்போகும் தந்தைக்கு உடன் இருக்கும் தனயன் தக்க பாடம் சொல்கிறான். தேய்வதும் வளர்வதுமான நில வையும், வந்து வந்து காணாமல் போகும் நட்சத்திரங்களையும், கண் கொண்டு காண முடியாத சூரியனையும் மட்டுமே பார்த்துப் பழகிய அந்தக்குழந்தைக்கு இந்த சத்தத்தோடு வெடித்து விழும் திடீர் நட்சத்திரங்கள் ஆச்சரியத்தின் உச்சமாக இருக்கின்றன. இதுவரை காணாத ஒன்றை அந்தக் குழந்தை இப்போது பார்க்கிறது. இனி எப்போது பார்க்கும் என்றும் தெரியாது. அதைப் பற்றிய எந்தக் கவலையும் இல்லாமல் இயற்கை இந்த நேரத்தில் அந்தக் குழந்தைக்கு தந்த ஆச்சரியத்தை அந்த நேரத்திலேயே முழுமையாக அனுபவிக்கிறது அந்த குழந்தை.”

“ஒரு சில விநாடிகளே பார்வைக்கு விருந்தளிக்கும் இந்தப் பட்டாசு களுக்கு பயன்தரு நேரத்தோடு ஒப்பிடுகையில் செலவாகும் பணம் சற்றே அதிகம்தான். என்றாலும் இது போல புகைப்படங்களின் மூலமாக அந்த கண நேர இன்பங்களை கன

நேர இன்பங்களாக்கிவிட முடியும். ”

“தன் குழந்தையின் மழலைச் சொற்களின் இனிமையை உணராதவர்கள் தான் குழல் இனிது, யாழ் இனிது என்பார்களாம். அது போல வானத்தில் சிரிக்கின்ற பட்டாசை படம் பிடிக்கும் அந்த நபர் தன் கையில் இருக்கும் குழந்தையின் கள்ளங் கபடமற்ற வெள்ளைச்சிரிப்பை இதுவரை பார்க்காதவராகத் தான் இருக்க வேண்டும்.”

பார்த்தீர்களா? ஒரு காட்சிக்கு எத்தனை கருத்துக்கள்? புது வருடத்தில் எண்கள் மாறுவதைப்போல மனிதர்களுக்கு மனிதர் எண்ணங்களும் மாறுபடும். எங்கள் செயல்களுக்கு நன்மை தீமை சொல்ல போட்டி போட்டுக் கொண்டு ஆயிரம் பேர் வருவார்கள். அவர்களின் கருத்துக்களுக்கு எல்லாம் செவி கொடுங்கள். ஆனால் உங்களுக்கு தேவையானவை என்று தெரிவதை மட்டுமே செவிக்குள் எடுங்கள்.

தவறிய உப்பின் உபயம் தான் பட்டாசு. தவறிச் செய்யும் தவறுகள் தவறே அல்ல என்பதற்கு தக்க சாட்சி தான் பட்டாசு. அதற்காக தவறு என்று தெரிந்தும் தவறு செய்யாதீர்கள். அது மகா தவறு.

***இந்தப் புத்தாண்டில்***
***எண்களில் ஏற்பட்ட உயர்வு***
***எண்ணங்களிலும் ஏற்பட***
***நன்றாவோம்! ஒன்றாவோம்!***
***வென்றாவோம்!***

## *வரலாற்றை மாற்றிய பறவைகள்!*

தெஹிவளை தேசிய விலங்கியல் பூங்காவின் 86 ஆண்டு கால வரலாற்றை மாற்றி, முதல் முறையாக விலங்கியல் பூங்காவுக்குள்ளேயே பிறந்த 5 கறுப்பு அன்னப்பறவைகள் பொதுமக்களின் காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளன. இந்த கறுப்பு அன்னப்பறவைகள் கடந்த மார்ச் மாதம் முட்டையில் இருந்து வெளியில் வந்தன. அப்போது கொரோனா பரவல் காரணமாக விலங்கியல் பூங்கா மூடப்பட்டிருந்த காரணத்தினால், கறுப்பு அன்னப்பறவை குஞ்சுகளை பொது மக்கள் பார்வையிட சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.



மூன்று ஆண் பறவைகள் மற்றும் இரண்டு பெட்டை அன்னப்பறவைகள் இவை ஐந்தில் அடங்கும். கறுப்பு பெட்டை அன்னப்பறவை, மீண்டும் நான்கு முட்டைகளை இட்டு அடைகாத்து வருகிறது என விலங்கியல் பூங்காவின் நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர். இந்த கறுப்பு அன்னப்பறவைகள் அவுஸ்திரேலியாவை தாயகமான கொண்டவை தெஹிவளை விலங்கியல் பூங்காவில் தற்போது 7 கறுப்பு அன்னப்பறவைகள் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

காவ்யமோகன்



# சித்திராங்கதா

39

## சமாதானத் தூது

நடந்து முடிந்த வன்னியர் விழாவில் வன்னியத்தேவனின் வெளிப்படையான எண்ணத்தை அறிந்து கொள்ள முடியாவிடினும் வன்னியத்தேவனின் உள்ளெண்ணம் குறித்து ஏனைய வன்னி வேந்தர்களுற்கு தெளிவூட்டும் முயற்சி வெற்றி கண்டது என்றே சொல்ல வேண்டும். பாதிக்கப்பட்ட வன்னியத்தேவனின் வியூகங்கள் இனி மேலும் கூர்மையாக்கப்படும் என்பதை சங்கிலிய மகாராஜா நன்றாகவே உணர்ந்திருந்தார். அதற்கு முதல் எடுத்துக்காட்டாய் அரண்மனை வாயிற் காவலன் போர்த்துக்கேய பாதிரியார் டிமெல்லோ சங்கிலிய மகாராஜாவை சந்திக்க வந்திருப்பதாய் அரசவையில் வந்து தெரிவித்தான்.

ஒரு மதத்தலைவர் என்கிற முறையில் மரியாதையுடனே பாதிரியார் அரசவைக்குள் வரவேற்கப்பட்டார்.

ஆனால் அரசவைக்குள் பிரவேசித்த பாதிரியாரின் செயல்களில் மரியாதையோ பணிவோ சிறிதும் இருக்கவில்லை. அரசவையில் இருந்த எல்லோரும் அதனை ஆச்சர்யமாகப் பார்த்தனர். சங்கிலிய மகாராஜா அதைப் பொருட்படுத்தவில்லை. பண்பு தெரியாதவர்களிடம் அதை எதிர்பார்ப்பது அநாவசியம் என்பதை உணர்ந்திருந்தார் மகாராஜா.

“போர்த்துக்கேய படையினரும் தளபதி பிலிப்-டி-ஒலிவேரா அவர்களும் புத்தளம் மன்னார் வழியாகப் பயணித்து பூநகரியில் பாசறையிட்டுள்ளனர். அங்கிருந்து யாழ்ப்பாணத்திற்குள் பிரவேசிக்க குடாக்கடலை கடந்தாக வேண்டும். போதுமான ஓடங்களையும், நாவாய் களையும் சங்கிலிமன்னன் உடனே ஏற்பாடு செய்து தர வேண்டும் என்ற கோரிக்கையினை தெரியப்படுத்தவே இவ்விடம் வந்தேன்.” என்றார் பாதிரியார் டிமெல்லோ.

“பாதிரியார் டிமெல்லோக்கு புத்தி பேதளித்திருக்காது என்று எதிர்பார்த்தேன்.” என்று தன் கோபத்தை அடக்கியபடியே கூறினான் சங்கிலியன்.

“இதனால் நீ கூறவருவது என்ன என்பதை நான் தெளிவாக அறிந்து கொள்ளலாமா?”

"தங்களிற்கு சிறிதளவாவது சிந்தை தெளிவு இருந்திருந்தால் இப்படியொரு கோரிக்கையை ஈழ அரண்மனைக்கு எடுத்து வந்திருப்பீரா?
மதத்தலைவர்கள் மதத்தோடு நிற்க வேண்டும் என்பதை மறந்து இப்படி பொல்லாத்தனத்திற்கொல்லாம் துணைபோக துணிவது மடத்தனமாக தமக்கு தோன்ற வில்லையா பாதிரியாரே?"

"சங்கிலியா, மதத்தலைவனாய் இருந்தாலும் நான் போர்த்துக்கேய ஆட்சிக்கு கட்டுப்பட்டவன். சமயத்தோடு சமாதானமும் என் பணியே. தளபதி கூறிய கருத்தை தெரிவிக்கும் தூதுவனாகவே உன்னிடம் வந்தேன். நீ தெரிவிக்கும் மறுமொழியை அவர்களிடம் சென்று தெரிவிப்பேன். அதுவே எனக்கு இட்ட பணியாகும்." என்றார் பாதிரியார்.

"அப்படியாயின் இப்போதே சென்று கூறுங்கள் தங்கள் தளபதியாரிடம்! அழையாத விருந்தாளிகளை நாங்கள் வரவேற்கத் தயாரில்லை என்று.. நாவாய் ஓடம் எதுவுமே அவர்களிற்கு அளிக்கப்படாது என்று.. கூறுங்கள்."

என்று ஆவேசமாய் கூறியவன் ராஜமந்திரியாரை நோக்கி

"மந்திரியாரே! குடாக் கடலோரம் வாழும் மீனவர்களுக்கு இந்த



உத்தரவு அளிக்கப்பட வேண்டும். யாரும் ஒரு கட்டுமரம் கூட தந்துதவக் கூடாது.”

“அப்படியே அரசே..” என்றார் ராஜமந்திரியார்.

“நல்லது சங்கிலியா, நான் அவ்வாறே தளபதி ஒலிவேராவிடம் தெரிவிக்கிறேன். அதோடு தளபதி கூறிய இன்னொரு கோரிக்கையையும் உன்னிடம் தெரிவிக்க வேண்டும்.”

“சொல்லுங்கள்!” என்றான்.

“உன்னிடம் நட்புறவு வேண்டியே தளபதி ஒலிவேரா யாழ்ப்பாணம் வருகிறார். நீ அரியணை ஏறியது நாட்டு மக்கள் ஒரு சாரர் ஏற்புடைய செயலல்ல என்று இன்றும் கருதுகின்றனர். அவர்களே நாட்டில் தொடர் கலவரங்களை நிகழ்த்திக் கொண்டிருக்கின்றனர். அக்கலவரங்களை அடக்கியாள உனக்கு போர்த்துக்கேயத் தளபதி உதவிபுரியக் காத்திருக்கிறார். அவர்களின் உதவியை ஏற்க மறுத்து பெரும்படையை தஞ்சையில் இருந்து வருவித்து வீணான இழப்புக்களை அதிகப்படுத்தியுள்ளாய். ஆதலால் விரைந்து தஞ்சைப்படைகளை திருப்பி அனுப்ப வேண்டும் என்று தளபதி ஒலிவேரா உன்னிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.”

பாதிரியாரின் வார்த்தைகளால் சங்கிலியன் நிதானம் இழந்தான்.

“தங்கள் நட்புறவு நாடகம் அபாரமாக இருக்கிறது பாதிரியாரே ராஜ தந்திரங்களை வேறு மன்னர்களிடம் சென்று காட்டச் சொல்லுங்கள் ஒலிவேராவிடம்.

உள்நாட்டுக் கலவரங்களை அடக்க நீங்கள் எனக்கு துணை புரியப் போகிறீர்களா? கலவரங்களை கட்டவிழ்த்து விடுவதே தங்கள் திறமையல்லவா? பின்னர் எங்கள் களஞ்சியத்திற்கு வெள்ளெலிகள் காவலா?

வர்த்தக நோக்கம் கருதி வந்தவர்கள் என்பதால்த்தான் தங்களிடம் அன்பு காட்டினர் எம்முன்னோர். கடை விரிக்க வந்தவர்கள் இன்று காலடியில் இருக்கும் பூமியையே களவாட துணிந்து விட்டீர்களோ? இன்று தஞ்சைப் படைகளை திருப்பியனுப்பும் படி எங்களிடமே கோரிக்கை விடுக்கின்றனர். என்ன ஆணவம் அந்த ஒலிவேராவுக்கு.. அவனே இப்போது திரும்பிச் செல்ல வேண்டும் என நான் உத்தரவிட்டதாக போய்ச் சொல்லுங்கள்.”

என்று கோபத்தில் சிவந்த கண்களோடு கர்ச்சித்திக் கொண்டிருந்தான் சங்கிலியன்.

“சங்கிலியர் நான் மீண்டும் சொல்கிறேன். போர்த்துக்கேயர் நட்புறவை மட்டுமே வேண்டி இங்கு வருகின்றனர். வீணாய்ப் பகை வளர்த்துக் கொண்டு தேவையற்ற இழப்புக்களை உண்டாக்குவதை விட்டு நட்புறவை ஏற்றுக் கொள்ளுவதே உபகாரமான செயல் என்பதை நீ உணர வேண்டும். சங்கிலியரும் போர்த்துக்கேயர்களை பகைவர்களாக கருதவில்லை என்பது எங்கள் நம்பிக்கை!”

என பாதிரியார் கூறிக்கொண்டிருக்கும் போதே ராஜமந்திரியார் குறுக்கிட்டார்.

“உங்கள் நம்பிக்கை வாழ்க: தங்கள் நட்புறவின் அடிப்படையிலோ ஏராளமான யுத்த மரக்கலங்களை நாகைப் பட்டணத்திலிருந்து வரச்செய்திருக்கிறீர்கள்? அது எந்த வகை நல்லெண்ணத்திலும் நட்பிலும் என்று கூறுவீர்களா மரியாதைக்குரிய பாதிரியாரே?”

“மந்திரியார் வெறுமனே உணர்ச்சிவயப்பட்டு பேசுகிறார். பீரங்கிகளும், வெடி மருந்துகளும் எங்கள் வியாபாரப் பொருட்கள். அவற்றை ஏற்றி வரும் மரக்கலங்களை யுத்தகலங்கள் என்று எண்ணமுடியுமா? யுத்தத்தை மனிதர்கள் தானே தீர்மானிக்கிறார்கள். ஆயுதங்கள் அல்லவே!”

ஓர் ஏளனச் சிரிப்போடு சங்கிலியன் கூறினான்

“ஓ... நன்றாக இருக்கிறது உங்கள் சாக்குருவி வேதாந்தம் பாதிரியாரே, யுத்தத்தை எப்போதும் தவிர்ப்பதற்கே முயல்பவர்கள் நாம். ஆனால் யுத்தமே வழி என்று அறிந்த பின் தமிழர் பின்வாங்கவும் தயாராக மாட்டார்கள் என்பதுவும் மறந்து விடாதீர்கள். மனித நேயம் பேசி வந்த சமாதானத் தூதுவரே, உங்கள் இன வெறியையும் நாம் கண்டு கொண்டோம். ஆனால் எய்தவனை விட்டு அம்பினைப் பகைப்பதில் அர்த்தமல்ல என்று அறிவோம். பாதிரியாரே நீங்கள் செல்லலாம். ஒலிவேராவின் இரண்டு கோரிக்கைகளும் நிராகரிக்கப்பட்டுவிட்டன என்று போய்க் கூறுங்கள்.”

“புறப்படுகிறேன் சங்கிலியா, அதற்குமுன் தளபதி ஒலிவேராவின் முழு ஒப்பந்தச் செய்தியையும் கூறிவிட்டுச் செல்கிறேன்.”

என்று அந்த நீதிக்குப் புறம்பான வார்த்தைகளை தயக்கமன்றி கூறத்தொடங்கினார் பாதிரியார்.

அவையோர் எல்லோரும் செவிகளை தீட்டி அவற்றை கேட்கத் தயாரானனர்.

“எங்கள் மத மாவீரனான டொம் லூயிஸ் இனை கடுமையாக தாக்கி அநாகரிக முறையில் சிறைப்பிடித்துள்ளீர்கள். அவ்வீரனை உடன் விடுதலை செய்ய வேண்டும். மேலும் டொம் லூயிசினையும் அவனது வீரர்களையும் கடுமையாக தாக்கிய குற்றத்திற்காக தளபதி ஒலிவேரா தஞ்சைப்படைத்தளபதியை விசாரிக்க வேண்டும். விசாரணைக்காக தஞ்சை தளபதியை உடன் அனுப்பி வைக்க வேண்டும். தஞ்சை தளபதி மீதான விசாரணையிலோ, நீதி வழங்களிலோ சங்கிலி மன்னன் எவ்வகையிலும் தலையிடக்கூடாது.”

பாதிரியார் சொல்லிக்கொண்டிருக்கும் போதே

“ஆ......................."

என்று கர்ச்சித்தான் சங்கிலியன். அவன் கண்களில் எரிமலையினைக் கண்ட பாதிரியார் மௌனமானார்.

Perigos e Guerras Esforcado

சங்கிலியன் அரியணையை விட்டு கொதித்தெழுந்து

“யாரங்கே? என் வாளிற்கு இரையாகும் முன் இந்தப் பாதிரியை உடனடியாக வெளியேற்றுங்கள். இல்லாவிட்டால் இவன் தலை இவ் அவையிலேயே துண்டாகும்..... ம்......"

என்று சங்கிலியன் வாளை உருவ முன் காவல் வீரர்களால் விரைந்து பாதிரியார் வெளியேற்றப்பட்டார்.
ஒரு போரைத் துவங்குவதற்கு முன்பு ஆயிரம் முறை சிந்திப்பது தான் ஓர் அரசனுக்கு அழகு. இடையிலுள்ள பிரச்சினை வெறும் கௌரவம் சம்பந்தப்பட்டதாக மட்டும் இருந்து அதன் காரணமாக மூளும் போரினால் இரண்டு தரப்பு மக்களையும் வீணாய்க் கொன்று குவிப்பதனை பின்னாளில் மனிதகுலம் ஒருபோதும் மன்னிக்காது. ஆனால் அன்பு நெறியும் அறச்சிந்தனைகளும் போதிக்கும் ஒரு மதபோதகரின் வசீகர வார்த்தைகள் மூலம் அன்பை முன்னிறுத்தி அடிமடியில் அடிமைப்படுத்தும் சாதனங்களை தூதனுப்பி வைப்பவர்களை என்ன செய்வது?

இனிமை பூசிய வார்த்தைகளை வசிய மந்திரம் போல் உதடுகளில் உச்சரித்து உதிர்க்கையில் அவர்தம் இதயத்து எரிதழலை எங்ஙனம் ஊகிப்பது?

இராமன், சீதை எல்லோரும் இறந்து விட்டார்கள். ஆனால் பொய்மான் இன்னும் இறக்கவில்லை.

தொடரும்...


# நீங்களும் இணையலாம்!!!

எழுத்துத்துறையில் ஆர்வமுள்ளவரா?

புகைப்படங்கள் எடுப்பதில் பிரியமுள்ளவரா?

ஓவியங்கள் வரைதலில் முனைப்பானவரா?

பத்திரிகை வடிவமைப்பில் நாட்டமுள்ளவரா?

**thumi2016@gmail.com**
**0777840205**

துமி மின்னிதழில் இணைந்து பணியாற்ற அன்புடன் அழைக்கிறோம். மேற்குறித்த மின்னஞ்சல் முகவரியுடன் அல்லது தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.



# ஐயப்பன்
## விரதமும் இளைஞர்களின் வகிபங்கும்

**நி.விஜேந்திரா**

இந்த நாற்பத்து எட்டு நாள் என்பது சைவசமய விரத அனுஸ்டானங்களில் பின்னிப்பிணைந்திருப்பது நாம் அனைவரும் அறிந்ததே. மேலும் அறிவியல் ரீதியாக நோக்கினால் இன்றும் நமது பாரம்பரிய மருத்துவத்தில் சூரணங்கள் கசாயம, பஸ்பம், மூலிகைகள் சேர்ந்த மருந்துகளில் எல்லாம் அத்துறை சார்ந்த வைத்தியர்கள் மருந்துகளை சிபாரிசு செய்கின்றபோது இம்மருந்தினை 48 நாட்கள் எடுக்கவேண்டும் என அறிவுறுத்துவார்கள். உதரணமாக குடற்புண் (அல்சர்) நோய்க்கு சீரகத்தை எடுத்து அதனை காய்ச்சி வடீகட்டி காலையில் வெறும் வயிற்றில் 48 நாட்கள் அருந்தி வர அந்தநோய் இல்லாமல் சென்றுவிடும். இந்த சீரகம் என்ற சொல்லை பிரித்தால்,
சீர்+அகம் =சீரகம்.

எனவே சரீரத்தை சீர் செய்ய உதவுகின்றது. இதனை ஏன் இங்கு குறிப்பிடுகின்றேன் என்றால் நாட்களின் எண்ணிக்கைக்கும் எங்களது விரத அனுஸ்டானங்களிற்கும் தொடர்பை காட்டுவதற்காகும்.

பொதுவாக ஐய்யப்பன் விரதம் தொடர்பாக பல கருத்துக்கள் நிலவுகின்றன. அவ்விரதத்தை இறைவனுடைய அற்புதமாக பார்த்து மெய்சிலிர்த்து சிலர் புகழ்வதையும், சிலர் இவ் விரத வழிபாடுகள் தொடர்பாக விமர்சனங்களை முன்வைப்பதையும் காணலாம். கள ஆய்வுகள் மூலமாகவும் .பேட்டி காணல் முறை மூலமாகவும் சேகரிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் சில மக்கள் ஐய்யப்பன் வழிபாடு புதிதாக தொடங்கிய விரதம் எனவும் தங்கள் மூதாதையர்களின் வழிபாட்டில் காணப்படவில்லை எனவும் கூறுகின்றனர். சிலர் இல்லை ஐயனாரும் ஐய்யப்பனும் ஒன்றுதான். இது எங்கள் வழிபாடுகளில் காணபட்டுகின்று என்று கூறுகின்றதை காணமுடிகின்றது.

ஆனால் இந்த விரதம் தங்கள் மூதாதையர்களின் வழிபாட்டில்



காணப்படவில்லை என்று கூறுவது அவர்களின் அறியாமையே ஆகும். ஏன் என்றால் எமது சைவ வழிபாடுகளில் ஐய்யனார் வழிபாடு தொன்றுதொட்டே இருப்பது யாவரும் அறிந்த விடயம். இதற்கு உதரணமாக மிகவும் தொன்மையான அனலைதீவு ஐயனர் ஆலயம், வேலணை துறையூர் ஐய்யனார் ஆலயம், சுண்ணாகம் ஐய்யனார் ஆலயம், வேலணை செட்டி புலம் ஐய்யனார் ஆலயம் என்பவற்றை கூறலாம். இதுபோல் சிறு சிறு கோயில்களில் காவல் தெய்வமாக வழிபட்ட மரபு காணப்படுகின்றதை அவதானிக்கலாம். இதை வைத்துப் பார்க்கின்ற போது ஐய்யனார் வழிபாடு ஆதிகாலம் தொட்டே வணக்க வழிபாட்டுடன் காணப்படுவதை அவதானிக்கலாம்.

வாசகர்களிற்கு ஓர் கேள்வி எழலாம். ஐயனாரிற்கும் ஐய்யப்பனுக்கும் என்னதெடர்பு என்ன? இதற்கு விடை காண நான் விளைந்த போது இறைவனின் பெரும் கருணையால் கிடைக்க பெற்ற எமது குருநாதருடைய வழிகாட்டலினால் சபரிமலை யாத்திரை செல்கின்ற போது கேரள மாநிலம் மற்றும் தமிழக மாநிலங்களில் உள்ள ஐய்யப்பன் வழிபாடுகளை ஆராய்ந்து பார்த்தபோது தான் தெளிவான ஒரு பதில் கிடைத்தது. அது என்னவென்றால் கேரள மாநிலத்தில் உள்ள ஆரியங்கா என்னும் தலத்தில் ஐய்யனராக எழுந்தருளி அங்கு வருகின்ற அடியவர்களுக்கு அருளை வழங்கிய வண்ணம் உள்ள ஐய்யப்பனை பார்க்கும் போது அங்கே இலங்கையில் உள்ள ஐய்யனார்



கேயில்களில் எவ்வாறு ஐய்யனார் உடனுறை அம்பிகையுடன் காட்சி தருகின்றாரோ அதைபோல் காட்சி தருகின்றார். இதே போல் பாரத தேசமெங்கும் இவ்வாறு ஐய்யனார் ஆலயங்கள் பல உண்டு.

மிகவும் புண்ணிய பூமியான இலங்கையின் வடபால் உள்ள தீவுக்கூட்டங்களில் மிகவும் பிரசித்தி பெற்ற தீவாகிய நயினாதீவின் தெற்கு பக்கத்தில் கடற்கரையோரத்தில் ஒரு ஐய்யனார் ஆலயத்தில் தொன்மையான காலத்தில் இருந்தே முருக வழிபாடு, விநாயகர் வழிபாடு, ஐய்யனார் வழிபாடுகளை அவ்வூர் மக்கள் ஆற்றி வருவதை இப்போது கோவில் தர்மகர்த்தாவாக இருக்கின்ற மகாலிங்கம் ஐயாவின் மூலமாக கேட்டறியகூடியதாக உள்ளது. தங்களுடைய மூதாதையர்களும் வழிபட்டதாக கூறினார். எனவே அங்கு சைவ வழிபாடுகள் நடைபெற்றது என்பதும் அங்கு சைவ வழிபாடுகளில் ஐய்யனார் வழிபாடுகள் நடைபெற்றுள்ளது என்பதும் தெட்டத் தெளிவாக தெரிகின்றதை காணலாம்.





எனவே சிவனை முழுமுதற் கடவுளாக கொண்டு வழிபடுகின்ற சைவப் பெருமக்களது வழிபாட்டில் ஐய்யனார் வழிபாடு நடைபெற்றுள்ளதை காணலாம். எனவே ஐய்யனார் வேறு ஐய்யப்பன் வேறு என்றகேள்விக்கு விடையாக மேற்படி விளக்கம் அமைந்துள்ளது.

இலங்கை மட்டுமல்ல மலேசியா, சிங்கபூர், கனடா, ஐரோப்பியிய நாடுகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் ஐய்யப்பனைத் தேடி சபரி மலைக்கு யாத்திரையாக வருவதை காணலாம். இதில் இளையோர்களின் பங்களிப்பு மிகக்காத்திரமானது. இவ்விரத காலத்தில் பல்வேறு அற்புதங்களை அனுபவித்து அவர்கள் மற்றவர்களோடு பகிர்வதன் மூலமும் அவர்கள் வாழ்வில் நடைபெறும் மாற்றத்தை அவதானித்து. அவர்கள் இறைவனை நாடுதல் காரணமாகவும் அவர்கள் இறைவனால் ஆட்கெள்ள படுவதை உணரமுடிகின்றது.

( தொடரும்..........)




# புதிர் 19
# பரிசும் அவனுக்கே... தண்டனையும் அவனுக்கே...

சினமிகா

தன் முயற்சியில் சற்றும் தளராத விக்ரமாதித்தன், மரத்தின் மீதேறிக்கொண்ட வேதாளத்தை மீண்டும் கீழே இறக்கி, தன் முதுகில் சுமந்து கொண்டு செல்லும் போது அவ்வேதாளம் விக்ரமாதித்தனிடம் தான் ஒரு கதை சொல்லப் போவதாகவும் அக்கதையின் முடிவில் கேட்கப்படும் கேள்விக்கு சரியான பதிலை விக்ரமாதித்தன் கூறவேண்டும் என்று கூறி, வேதாளம் கதை சொல்ல ஆரம்பித்தது.

ஒரு முறை சந்திரகாந்தன் என்ற மன்னன் "சிவபுரி" என்னும் நாட்டை ஆண்டு வந்தான். வீரத்திலும், கொடையிலும் சிறந்தவனான அம்மன்னனின் ஆட்சியில் மக்கள் எல்லோரும் நன்றாகவே வாழ்ந்து வந்தனர். ஒரு சமயம் மன்னன் சந்திரகாந்தனின் அரண்மனை வாயில் காப்பாளன் சந்திரகாந்தனிடம் வந்து

"நமது நாட்டை எதிரி நாட்டு படைகள் தாக்கப் போகின்றன"

எனக்கூறினான். இதைக் கேட்டு திகைத்த மன்னன்

"அரண்மனை வாயில் காப்பாளனான உனக்கு இது எப்படி தெரியும்?"


எனக் கேட்டான். அதற்கு பதிலேதும் அளிக்காமல் அமைதியாக இருந்தான் அந்த வாயில் காப்பாளன்.

சில நாட்கள் கழித்து திடீரென்று எதிரி நாட்டுப் படைகள் சந்திரகாந்தனின் சிவபுரி நாட்டை தாக்கின. ஏற்கனவே முன்னெச்சரிக்கையாக இருந்த சந்திரகாந்தனும், அவனது படைகளும் மிகவும் வீரத்துடன் சண்டையிட்டு எதிரி நாட்டு படைகளை நாட்டை விட்டே துரத்தினர்.

அப்போது சந்திரகாந்தனுக்கு தன் அரண்மனை காவலன் கூறிய விஷயம் நினைவிற்கு வந்தது. மறுநாள் அவனை அழைத்து அவனுக்கு பரிசு தர எண்ணினான் மன்னன். அதன் படியே அடுத்த நாள் அரசவையைக் கூட்டி ஆயிரம் பொற்காசுகளை அக்காவலனுக்கு அளித்தான் மன்னன். சந்திரகாந்தன் அப்போது



“நம் நாட்டை எதிரிகள் தாக்கப்போவது உனக்கு எப்படி முன்பே தெரியும்?”



என கேட்டான். அதற்கு அக்காவலன் தனக்கு சில நிகழ்வுகள் அது நிஜத்தில் நடப்பதற்கு முன்பே, தனது தூக்கத்தில் கனவுகள் மூலம் தெரிய வந்ததாக கூறினான். இதைக் கேட்ட சந்திரகாந்தன்

“நீ ஆயிரம் பொற்காசுகளை வைத்துக் கொள்ளலாம், ஆனால் நீ இப்போது காவலன் பணியிலிருந்து நீக்கப்படுகிறாய்” எனக் கூறினான்.

இங்கு இக்கதையை நிறுத்திய வேதாளம், விக்ரமாதித்தியனிடம்

“விக்ரமாதித்தியா தன் நாட்டு வெற்றிக்கு காரணமாக இருந்த தன் அரண்மனைக் காவலனுக்கு ஆயிரம் பொற்காசுகளை கொடுத்துவிட்டு, அவனை பணியிலிருந்து சந்திரகாந்தன் ஏன் நீக்கினான்?”

எனக்கேட்டது. சற்று நேரம் சிந்தித்த விக்ரமாதித்தியன்,


“காவலன் தன் கனவின் மூலம் எச்சரித்து தன் நாட்டைக் காப்பாற்றியதற்கு பரிசாக அவனுக்கு ஆயிரம் பொற்காசுகள் தரப்பட்டது, அதே நேரத்தில் தன் அரண்மனை காவலன் பணியின் போது தூங்கியிருக்கிறான். அப்போதே அவனுக்கு அக்கனவு ஏற்பட்டிருக்கிறது. தன் கடமையில் அலட்சியமாக இருந்த காரணத்தால் அவனை பணியில் இருந்து மன்னன் சந்திரகாந்தன் நீக்கியது சரியே”

என்று பதிலளித்தான். அதற்கு வேதாளம் நீரும் மன்னராக இருப்பதால் இவ்வாறான கேள்விகள் உமக்கு இலகுவானவையே இயலுமானால் நான் கேட்கும் புதிருக்கு சரியான பதிலளியும் பார்க்கலாம் என்று சவால் விடுத்து புதிரென்றை போட்டது.

இங்கு 12 ஆணிகளை பயன்படுத்தி 4 சதுரங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இரண்டு ஆணிகளை அகற்றுவதன் மூலம் இரண்டு சதுரங்கள் மட்டுமே எஞ்ச வேண்டும். உங்களால் 5 நிமிடங்களுக்குள் பதிலைத் தீர்க்க முடியுமா? என்று முடித்தது வேதாளம்.

மன்னர் யோசிக்க தொடங்கினார். துமி அன்பர்களே நீங்களும் சிந்தியுங்கள். உமது பதிலை எமது மின்னிதழிற்கு அனுப்பி வையுங்கள்.

## புதிர் 18 – விடைகள்



# ஈழச் சூழலியல் 26

த.விதுர்ஷன்
மாணவன்
கொழும்பு பல்கலைகழகம்

புதிய வருடம் புதிய பல நம்பிக்கைகளை சுமந்து புத்துணர்வோடு மலர்ந்திருக்கையில் துமியூடாக சூழல்சார் கரிசனை விடயங்களை சுமந்து வரும் ஈழச்சூழலியல் வழி, பெரு மகிழ்வோடும், நன்றியுணர்வோடும், பசுமையான புதுவருட வாழ்த்துகளை பகிர்வதில் மகிழ்ச்சியடைகின்றோம். இனி வரும் காலங்களிலும் செயல் நெறி மேம்பாட்டின் தொடர்நிலைச் செயற்தொடர்ச்சியாக சூழலை நேசித்து, சூழலின் உயிர்ப்பை உணர்ந்து சூழல்நேய வாழ்வியல் நெறிகளை பின்பற்றி நிலைபேறான வாழ்வியல் இலக்குகளை அடைய எத்தனிப்போம்.

பீடைநாசினிகள் எவ்வாறு நீர்ச்சூழலில் தாக்கம் செலுத்துகின்றன என ஆராய விளைந்ததன் தொடர்ச்சியாக பீடைநாசினி உற்பத்தியாளர்கள் மிகவும் நச்சுத்தன்மையான, நீண்டகாலம் நிலைத்திருக்கக் கூடிய, உயிரியல் ரீதியில் ஒன்று சேரக் கூடிய பொருட்களை உற்பத்தி செய்வதற்குப் பதிலாக, சடுதியாக பிரிகையடையக் கூடிய, இலக்காகக் கொள்ளப்படாத, உயிரினங்களிற்குத் தீங்கை ஏற்படுத்தாத பீடை நாசினிகளை உற்பத்தி செய்வதில்



ஈடுபட்டுள்ளனர். நேரடியாகப் பிரயோகித்தல், மண்ணிலிருந்து மேற்பரப்போட்டம், கழிவுகள், தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் பொருட்கள் என்பனவற்றின் மூலம் பீடை நாசினிகள் நீர் நிலைகளை அடையலாம். ஓகனோகுளோரின் பீடைநாசினிகள் வனசீவராசிகளில் மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடியனவாகும்.

D.D.T இன் உயிரியல் ரீதியில் அதிகரித்துச் செல்லும் காரணி (உணவுச் சங்கிலியின் வழியே அதிகரித்துச் செல்லல்) நீரிலிருந்து அல்காக்களிற்கும், அதிலிருந்து மீன்களிற்கும், அதிலிருந்து பறவைகளிற்கும் செல்லும் போது 100,000 ஐ விட அதிகமானதாய் இருக்கும். 1980 களின் ஆரம்பத்தில் பெரும்பாலான நாடுகளில் தாய்ப்பாலில் தரப்பட்ட நியம அளவான 0.74 mg/kg ஐ விட அதிகளவான D.DT காணப்பட்டது.

பென்டாகுளோரோ பைபீனைலிஸ் என்பது நீண்ட காலம் நிலைத்திருக்கக் கூடிய, உயிரினங்களிற்கு ஆபத்து விளைவிக்கக் கூடிய இன்னொரு பீடை நாசினியாகும். சில பீடைநாசினிகள்



அபிவிருத்தியடைந்த நாடுகளில் தடை செய்யப்பட்டுள்ளன. ஆனால் இன்றும் கூட அவை ஏழை நாடுகளில் காணப்படுகின்றன. ஏனெனில் இவை சுற்றாடலிற்கு ஆபத்தானவையாகக் காணப்பட்டாலும் கூட, மிகவும் மலிவானவையாகும்.

உயிரியற் படியிறக்கமடைதல், நீர்ப்பகுப்பு, ஒளிப்பகுப்பு அல்லது ஒட்சியேற்றம் என்பனவற்றின் மூலம் அதன் செறிவு அரைவாசியாகக் குறைவதற்கு எடுக்கும் காலப் பகுதியே அவற்றின் நிலைத்திருக்கும் காலம் (Persistence) எனப்படும். D.D.T போன்ற பீடைநாசினிகள் கொழுப்பிற் கரைந்து, கொழுப்பிழையங்களில் ஒன்று சேரும். கிளைபொசேற் போன்ற ஏனைய பீடைநாசினிகள், அனுசேபமடைந்து கழிவாக வெளியேறக் கூடியனவாகும். நீர் வாழ் உயிரினங்களில் பீடைநாசினிகள் பல பாதிப்புகளை ஏற்படுத்தும். இவை புற்றுநோயை ஏற்படுத்தும். இனப்பெருக்கத்தை தடைசெய்யும். நிர்ப்பீடனத் தொகுதியை பாதிக்கும். உடலியல் விகாரங்களை ஏற்படுத்தும், முட்டை ஓடு மெலிவதைத் தூண்டும். மிகக் கூடிய செறிவில் காணப்படும் போது இறப்பைக் கூட ஏற்படுத்தும்.

நீர்ப்பகுப்பு, ஒளிப்பகுப்பு என்பனவற்றின் மூலம் மண்ணில் பல பீடைநாசினிகள் விரைவாக சிதைவடைந்து, நீர், காபனீரொட்சைட்டு, அமோனியா போன்ற எளிய பொருட்களாக பிரிகையடையும். எனினும், அவற்றிற்கு விதிவிலக்காக உதாரணமாக குளொடான் ஈபொக்சைட் போன்ற சிதைவடைந்த பின்னர் உருவாகும் பொருட்கள் அடிப்படை குளோடேன் ஐ விட பல மடங்கு நச்சுத் தன்மையானதாகக் காணப்படும். காபன், சக்தி என்பனவற்றைத் தரும் பொருட்களாக பீடைநாசினிகளை நுண்ணுயிர்கள் பயன்படுத்துவதனால் அவை பீடைநாசினிகளை படியிறக்கமடையச் செய்கின்றன.

## பெற்றோலிய ஐதரோகாபன்களினால் நீர் மாசடைதல்

மசகு எண்ணெய் பல சேதனப் பொருட்களைக் கொண்டுள்ளது. இவற்றில் பெரும்பாலானவை ஐதரோகாபன்கள் ஆகும். இவற்றின் ஒரு மூலக்கூறில் 4 தொடக்கம் 26 அணுக்கள் வரை காணப்படும்.இவை பல அணுக்களைக் கொண்ட






மணம் வீசும் ஐதரோகாபன்கள், பல குளோரினேற்றமடைந்த இரு பீனைல்கள், பல எண்ணிக்கையான பார உலோகங்கள் என்பனவற்றைக் கொண்டுள்ளன. வீடுகள், கார், பஸ், புகையிரதம், படகு, கப்பல்,விமானம் போன்ற போக்குவரத்து சாதனங்களிலும் நாளாந்த வாழ்விலும் மனிதர்களினால் பெற்றோலியப் பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன. நடைமுறையில் ஒவ்வொரு கைத்தொழிலும் பெற்றோலியப் பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன. தற்போதைய வருடாந்த உலக எண்ணெய் உற்பத்தி மூன்று பில்லியன் தொன்கள் ஆகும்.

அநேகமாக எந்தவொரு கைத்தொழிலிலும் பயன்படுத்தப்படும் எண்ணெயில் ஒரு பகுதி நீர் நிலைகளை அடைவதைத் தடுக்க முடியாது. நீர் நிலைகளை அடையும் எண்ணெய்களின் அளவை முழுமையாக மதிப்பிட முடியாவிட்டாலும் கூட, கடற் சுற்றாடலில் சேரும் எண்ணெயின் அளவு வருடமொன்றில் 2.2 மில்லியன் தொன்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. நிலத்திலிருந்து வரும் கழிவுகள், தாங்கிகளைச் சுத்தம் செய்யும் போது வெளியேறும் எண்ணெய்க் கழிவுகள், எரிபொருள் எண்ணெய்க் கழிவுகள், ஏனைய வடிவிலான எண்ணெய்க் கழிவுகள் என்பனவற்றினாலேயே பெரும்பாலான மாசுக்கள் வந்தடைகின்றன.

வருடாந்தம் பல மில்லியன் தொன் அளவான எண்ணெய்க் கழிவுகள் கடலை வந்தடைந்தாலும், கடலில் எண்ணெய் மீதிகள் ஒன்று சேர்வதற்கான சாட்சிங்கள் எதுவுமில்லை. மனித செயற்பாடுகளின் காரணமாக அறிமுகப்படுத்தப்படும் எண்ணெய்களை பிரிகையடையச் செய்யும் வல்லமை தற்போது கடற் சுற்றாடலிற்கு உள்ளதை இது எடுத்துக் காட்டுகின்றது. எனினும், வருடாந்தம் ஏறத்தாழ 400,000 தொன் அளவிலான எண்ணெய் தற்செயலாகச் சிந்தப்படுவதனால் குறிப்பிட்டதொரு காலத்தில் இது மிகவும் ஆபத்தானதாக விளங்கும்.

ஏனெனில் மிகச் சிறிய இடத்தில் அதிக செறிவின் காரணமாக பாதிப்பு அதிகமானதாக இருக்கும். சுவாசம், ஒளித்தொகுப்பு, உணவூட்டல் என்பனவற்றை பாதிப்பதனால், தாவரங்கள். விலங்குகள்



என்பனவற்றின் மீது எண்ணெய் படும் போது அவை பாதிக்கப்படுகின்றன. சில விலங்குகளின் மீது எண்ணெய் படிவதனால் அவை நீரில் மிதக்கும் ஆற்றலை இழந்து விடுகின்றன. பறவைகளின் இறகுகள் பாதிக்கப்படுவதனால், வெப்பம், குளிர் என்பனவற்றிலிருந்து பாதுகாப்பினைப் பெறுவதும் பாதிக்கப்படுகின்றது. உடலிற்கு நீர் செல்வது தடைப்படுவதனால் நீரிழப்பின் காரணமாக எண்ணையை விழுங்கிய மீன்கள் இறந்து போகலாம். எண்ணைய் நச்சுத் தன்மையானதாக இல்லாவிட்டாலும் கூட எண்ணெயினால் மாசடைந்த நீரில் வாழும் மீன்களில் எண்ணெய் மணம் வீசுவதனாலும், சுவையில் மாற்றமேற்படுவதனாலும் அவற்றை விற்பனை செய்வதில் பிரச்சினைகள் ஏற்படலாம்.

ஆராய்வோம்............

## கெவ்லே ஆடும் கிறிஸ்துமஸ் பண்டிகையும்

கெவ்லே ஆடு ஸ்வீடன் நாட்டின் கிறிஸ்துமஸ் சின்னமாகும். ஸ்வீடனின் கெவ்லே என்ற நகரில் ஒவ்வோர் ஆண்டும் கிறிஸ்துமஸை முன்னிட்டு வைக்கோலினால் ஆடு ஒன்று வடிவமைக்கப்படும். இதுவே கெவ்லே ஆடு என்று அழைக்கப்படுகிறது. 1966-ஆம் ஆண்டு இந்த வைகோல் ஆடு கெவ்லே நகரத்தில் முதன்முதலாக நிறுவப்பட்டது. இந்த ராட்சத கெவ்லே ஆடு 42 அடி உயரமும் 3.6 டன் எடையும் கொண்டது. உலகின் மிகப் பெரிய வைக்கோல் ஆடு என்று கின்னஸ் புத்தகத்திலும் கெவ்லே ஆடு இடம்பெற்றது. ஒவ்வொரு ஆண்டும் கெவ்லே ஆடு அமைக்கப்படும்போது அந்த ஆட்டின் மீது தாக்குதல் நிகழ்வதும் தொடர்கதையாகிறது. 1966-ஆம் ஆண்டு முதலே கெவ்லே ஆட்டின் மீது தாக்குதல் சம்பவங்கள் அரங்கேறிவருகின்றன. கடந்த வெள்ளிக்கிழமையன்று கெவ்லே ஆட்டிற்கு தீ வைத்த சம்பவமும் நடந்துள்ளது.

எதுவாகினும் பல தாக்குதல்களை கடந்து, ஸ்வீடன் மக்களின் கிறிஸ்துமஸின் சின்னமாகக் கருதப்படும் கெவ்லே ஆடு மிளிரும் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு இந்த ஆண்டும் மிளிர்ந்து கொண்டிருக்கிறது.



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | 4 | | | 5 |
| | | 6 | | | | 7 | |
| 8 | 9 | | | 10 | 11 | | |
| 12 | | | 13 | | 14 | | |
| | | | 15 | | | | |
| 16 | 17 | 18 | | | 19 | | 20 |
| 21 | | | | 22 | | | |
| 23 | | | 24 | | | 25 | |

# குறுக்கெழுத்துப்போட்டி 36

### மேலிருந்து கீழ்

1- வீண் காத்திருப்புக்கு கூறப்படும் பழமொழி
2- பண் (குழம்பி)
3- சீதையை ஏமாற்றிய விலங்கு (தலைகீழ்)
4- உடல்
5-ஔவையோடு தொடர்பு பட்ட மரம் (குழம்பி)
7- இராமாயணத்தில் குகனின் தொழில்
9- சிரம்
11- நீக்கு
13- இடையன் , இறைவன் (குழம்பி)
17- வங்கியில் சேமிப்பின் இலாபம் (திரும்பி)
18- தொடை
19- புராதன தமிழரின் ஆயுதம்
20- துவாரம் (குழம்பி)
22- பசித்தாலும் புல் உண்ணாதது

### இடமிருந்து வலம்

1- தற்போதய பாகிஸ்தான் பிரதமர்
6- மந்திரங்களால் செய்வது (குழம்பி)
7- இது போனால் சொல்லுப் போச்சு என்பார்கள்
8- வாசலில் இருப்பது (திரும்பி)
10- முத்தமிழில் ஒன்று (திரும்பி)
12- சூரிய உதய வேளை
14- பறவை (திரும்பி)
15- மூங்கில் (திரும்பி)
16- ஜலதோ'ம்
19- தமிழரின் உடை (குழம்பி)
21- கிராமிய விளையாட்டு
23- காற்று (திரும்பி)
24- கொலை
25- நாற்றம்

## குறுக்கெழுத்துப்போட்டி - 35 விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 பா | 2 கி | ஸ் | தா | 3 ன் | | 4 தா | 5 சி |
| 6 வ | ளி | | | 7 மா | னை | வ | ன் |
| 8 ம | ஞ் | 9 சா | 10 டி | | | 11 ணி | பி |
| 12 ன் | ச | ஞ் | க | | 13 ம் | | |
| 14 ளி | ல் | சி | அ | | 15 த | 16 டை | |
| ப் | | | க் | | 17 வா | ச | 18 ம் |
| 19 பு | 20 வி | | 21 டி | 22 | | ச | த |
| | 23 டை | எ | | 24 ரை | க | க் | ச |

சரியான விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி

www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

# 24 வருடங்கள்

என். நிலவிந்தன்

இந்த மனிதர்கள் நான் பார்க்காதவர்கள். அதிசயங்களாய் வளர்ந்து கிடக்கும் இந்த கட்டடங்களும், பாதைகளின் இருபக்கங்களும் மூடிக் கொண்டு வரும் பிரம்மாண்டங்கள். பாரிஸ் நகரின் வர்ணச் சாயல்களை இங்கேயும் பார்க்க முடிகிறது. அந்தக் கட்டிடங்களைப் பற்றிச் சொல்கிறேன். ஒரு இருபத்து நான்கு வருடங்கள் இருக்கும். மருங்குக் கிடந்த சிங்கத்தின் தலை யுத்ததை கைக்காட்டி கை காட்டியே கடனும் லாபகாரமும் பெற்று விட்டது.

"எங்கட சொந்த நாடு தானே..."

என்று நினைத்து கண்களை விழித்து பார்துக் கொண்டு வந்தான் செல்லையா.

இந்த பாரிஸ் சிட்டிசன் தான் அவதிப்படும் மனக்குழப்பத்திற்கு முடிவு சொல்லத்தான் மீள வந்து கொண்டிருக்கிறான். இந்தப் புறப்பாடு அவசர அவசரமானது. சத்தியமாக நல்ல காரியம் என்று சொல்ல முடியாது. தலதாமாளிகை இரவு ஊர்வலத்தில் காணாமல் போன குழந்தை போல அவன் கண்கள் கலங்குவதற்கும் கலங்காமல் இருப்ப தற்கும் இடைநடுவில் இருந்தது.

இந்த நகரமெல்லாம் மாறிப் போய்விட்டது. அங்கு போகின்றவர்கள் மீண்டும் மீண்டும் பார்த்தாலும் யாரோ போலத் தான் தெரிகின்றார்கள். கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இறங்கி தாயக மண்ணில் பாதம் வைத்த செல்லையாவின் உள்ளம் வார்த்தைகளால் விபரிக்க முடியாத மனக்குமுறலைத் தந்தது.

அங்கிருந்து வாடகை கார். பயணம் தொடர்கிறது. எங்கே என்று வினாவுகிறீர்களா? பொன்னம்மா வீட்டுக்குத்தான்.

பொன்னம்பல வாணேஸ்வர் கோயில் வீதியை உட்புகுந்த கார் நகர்ந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணத்தை விரைகிறது.

செல்லையாவின் கண்கள் அகல விரித்து சாலை ஓரங்களை கண்டு கொள்கிறது. உச்சி மணி ஓசையும்

கோவில் முன் பூ மாலைக்கடையும் வந்து போகும் தமிழர் கூட்டமும் வியப்பை ஏற்படுத்துகிறது. இதில் என்ன வியப்பு?

அது ஒன்றுமில்லை.
அன்று கொழும்பில் தமிழர்களே இருக்க முடியாத நேரம் திருநீறு அணிந்தவர்களையும், தேங்காய் எண்ணெய் வைத்த தலையோடு யாராவது வந்தாலும் மண்டை உடை தான். ஆனால் இன்று அவ்வாறு இல்லை. இது தான் இன்று செல்லையாவின் ஆச்சரியத்திற்கு காரணம். வழி வழியே புத்தர் சிலைகள் நிற்கின்றன. இருக்கின்றன. அரசமர நிழல்கள் அவரை வருடிக்கொள்கிறது.

அது ஒருபுறம் இருக்க வீதியெல்லாம் வாகன நெரிசல். இரைந்து கொண்டே இருக்கும். பாதையில் செல்லையா தனது கண்களை மறந்து விட்டான். அவன் நினைவுகள் பொன்னம்மாவை நோக்கி இடம் பெயர்கிறது.

பொன்னாமாவின் திடகாத்திரமான தோற்றம், நீளமாக வளர்ந்த கருமை சூடிய தலை மயிர் எல்லாமும் செல்லையாவின் நினைவுகளாய் மீளகிறது. கருப்பட்டியும் தேத் தண்ணியும், அப்பமும் சீனியும் அவை சிறு பராயத்தில் உண்டவை, அவை நாக்குகளில் மீண்டும் வருகிறது. மீண்டும் வரும் இவை கண்களின் வழியாகவும் கசிய ஆரம்பிக்கின்றது. பொன்னம்மா வீட்டில் இருக்க மாட்டாள். அந்தப் பார்வைகள் படலையை வெறித்துப் பார்த்தப்படி தான் இருந்திருக்கும்.

“செல்லையா வருவான்... செல்லையா வருவான்... பேரக்குழந்தைகளை கூட்டி வந்து என் மடியில் தவழவிடுவான்...”

இவை கானல் நீராய் போய் விட்டது.

மகாபாவி இவற்றையெல்லாம் எப்படி உணர்ந்து கொள்வான். எரிமலையாய் தன்னை கேடு கெட்ட மகாபாவி என வருந்திக்கொள்வதோடு உணர்ந்துக் கொள்வான்.

வானத்தில் கருமேகங்கள் சூழ்ந்த நேரம் அப்போது சூரியனும் இல்லை. அசைந்து போகும் காற்றுகள் இல்லை. அந்த தொலைபேசி அழைப்போடு தான் செல்லையா இரண்டு பிள்ளைகளையும், மனிசியையும் விட்டுட்டு புறப்பட்டவன்

“பொன்னம்மாக்கா தவறிட்டா...”

இந்த செய்தி வரை அவனுக்கு வரட்டு கௌரவமும் பொன்னம்மா குடுத்த பாலோடு ஏறிய ரோசமும் தான் தடை நடுவாய் இருந்துது.

பொன்னம்மாக்கும் அப்படிதான் இறுமாப்பு. சாதித்திமிறும் இருக்கு. பொன்னம்மா முகத்தை பார்த்தால் அப்பிடி சொல்வே முடியாது.

வெள்ளையோ! வெள்ளை யாழ்ப்பாணத்து பெண்களும் உந்த நிறத்தில் இருக்கினமோ? என்று கேற்கிற அளவு நிறம். கருணையின் வடிவமாய் அவளுடைய தோற்றம். பொன்னம்மாவின் கணவர் கைலாசபிள்ளை. இரண்டு பொடியலும்

வளர்ந்து இளந்தாரி மட்டுல வர கைலாசபிள்ளை வருத்தத்தில் இறந்திட்டார். மூத்தவன் கனகய்யா அவன் இயக்கத்துக்கு போய் சேந்திட்டான். கொஞ்ச காலம் தொடர்பு இருந்தது. பிறகு தொடர்பு இல்லாமல் போய்விட்டான்.


இளையவன் “செல்லையா” பொன்னம்மாக்கு அவன் மீது தான் பாசம் அதிகம் இருந்தது. செல்லையாவும் அப்பிடிதான்

“பொன்னாச்சி.... பொன்னாச்சி....”

என்று தாயை கொஞ்சி குலாவுவான். மூத்தவன் போல இளையவனும் இயக்கத்திற்கு போயிருவான். என்ற அச்சம் பொன்னமாக்கு இருந்தது.

எப்படியாவது செல்லையாவை வெளிநாடு அனுப்ப வேணும் என்ற ஏற்பாடுகளையும் மேற்கொண்டாள். அதுக்குள்ள இன்னொரு விபரீதம் நடக்குது. அது என்ன விபரீதம்?

செல்லையான்ட காதல் தான்.....
முன்பொருமுறை பொன்னம்மா தன் தம்பி நடேசபிள்ளையின் மகள் தாரணி ஒரு பொடியனை காதலித்த போது கடும் உக்கிரமாக செயற்பட்டிருக்கிறார். அப்போது தாரணிக்கு வெறும் இருபது வயதுதான் வரும். தன் காதலை வீட்டில் ஏற்றுத் கொள்ள மாட்டார்கள் என்று அறிந்தவள் காதலித்த பொடியனோடு ஓடி வேலணை வட்டாரப் இரணியில் போய் ஒழிந்து கொண்டாள்.



"தன் குடும்ப மானமே போய் விட்டதே...."
"நாதாரி நாய்...."
"மானத்தையே வாங்கிட்டாள்..."

என்று நடேசபிள்ளை தமக்கை பொன்னக்காவிடம் வந்து அழுது புலம்பினார்

உயர்வுச் சிக்கல் மேலெழுந்த வாரியாய் ஓடும் இவர்களுக்கு எப்படி சும்மா இருக்க முடியும்.

பொன்னம்மா! திட்டம் தீட்டினான்.
வேடதாரியாய் மாறி தாரணியை சமாதானப்படுத்தி வீட்டுக்கு கூட்டி வந்தாள்.

ஒரு மாதம் வரை வீட்டில் இருந்திருப்பாள். பின்பு கிணற்றுக்குள் விழுந்து தற்கொலை செய்து கொண்டதாக தகவல் தான் வந்தது. ஊரில் பலவாறு கதைகள் அடிபட்டன. கர்ப்பிணித் தாரணிக்கு பப்பாசியும், எள்ளும் அன்னாசியும் கொடுத்து குழந்தையை பொன்னம்மா அழித்து விட்டதாகவும் இழப்பைத் தாங்காத தாரணி கிணற்றில் பாய்ந்து விழுந்து உயிரை மாய்த்துக் கொண்டாள். என்று ஊரில் பேசிக் கொண்டார்கள். இது நடந்து கொஞ்சக் காலம் தான் இருக்கும்.

இப்போது மகன் செல்லையா காதலிக்கிறான்!
செல்லையா அவசர அவசரமாக கிளப்பப்படுகிறான்.

"சலூன்காரன்ட பொட்டைய காதலிச்சது தான் பிரச்சனையோ..?" இல்லாட்டால்,

"சண்டைக்க செத்துப்போடுவான் என்டதோ..?"

செல்லையா கிளிப்பிள்ளை போன்றவன். அந்த மனிசி கெளரவப் பேய்! இந்த விசயத்தில் நாகத்தைப்போல நிக்குது பொன்னம்மா.

"நீ வெளிநாடு போகாட்டி என்னை உயிரோட பாக்கேலாது..."

இந்த வார்த்தைகள் எல்லாம் அவனால் பொருட்படுத்தாமல் கடக்க முடியாதவை.

பிரிந்த காதலோடு கண்ணை கசக்கி சென்றவன் மீண்டும் வருகிறான்.

அனுப்பிவைத்த பொன்னம்மா மீண்டும் அழைத்திருக்கின்றாள்.

அழைப்பு பிறிதொருவரால்...

அழைக்க காரணம் தான் பொன்னம்மா!

செல்லையாவின் இருபத்து நான்கு வருட கோபம் இப்போது வருத்துகிறது. வீட்டு கூரைப்பள்ளியொடு பேசி பேசி தனிமையுடன் பொழுதைக் கழித்த பொன்னம்மா இறந்து விட்டார்.

**(முற்றும்)**

# ஐஸ்கிறீம் சிலையே நீ யாரோ...?

## ரசிக்கும் சீமானே!

இ.தனிஸ்ரன்

மரங்களும் நடுங்கும் மார்கழிப்பனி கொட்டிக் கொண்டிருக்கிறது. பெட் சீட்டை இழுத்து போர்த்திக்கொண்டு இவர்களது பேச்சு விடியலை நோக்கி நகர்கிறது. பல மாதங்களாய் எதிர் பார்த்த கிறிஸ்துமஸ் விடுமுறை இது. பிள்ளைகளுடன் நுவரெலியாவிற்கு சுற்றுலா செல்லலாம் என்று ஏற்கனவே திட்டம் போட்டிருந்தாலும், கடும் பனியால் பிள்ளைகளுக்கு தடிமனும் காய்ச்சலும் பிடித்துக்கொள்ளவே வீட்டிலேயே கிறிஸ்துமஸ் - புதுவருட கொண்டாட்டங்களை செய்வது என்று முடிவு.

இரண்டு குழந்தைகளும் அடுத்த அறையில் ஆழ்ந்த துயிலில் இருக்க, இவர்களது படுக்கையறையில் மென்மையான சத்தத்தில் இளைய ராஜா தொடங்கி டி. இமான் வரை மலரினும் மென்மையான மெலடிகள் அறை முழுவதையும் நிரப்பிக்கொண்டிருக்கிறது.

*‘மரங்கள் நடுங்கும் மார்கழி*
*ரத்தம் உறையும் குளிர்*
*உஷ்ணம் யாசிக்கும் உடல்*
*ஒற்றைப் போர்வை*
*பரஸ்பர வெப்பம்*
*இது போதும் எனக்கு’*

வைரமுத்துவின் கவிதைக்கு அர்த்தம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

*‘அடை மழை வரும் அதில் நனைவோமே*
*குளிர் காய்ச்சலோடு சிநேகம்*
*ஒரு போர்வைக்குள் இரு தூக்கம்’*

பிளேயரில் ஹாரிஸ் ஜெயராஜின் இசையில் பாம்பாய் ஜெயஸ்ரீ ரீங்கரிக்க, காதலித்த காலங்கள் இருவர் கண்களிலும் மின்னுகிறது. அவள் பாடல் வரிகளுக்குள் இறங்க இவன் அவள் அருகினிலே கிறங்க,

*‘காதலெனும் முடிவிலியில் கடிகார நேரம் கிடையாதே’*

இந்த வரிகளில் சிலிர்த்து கொண்டவள், யாரப்பா இந்த பாட்டு எழுதினது?

*‘சில சமயம் விளையாட்டாய்*
*உன் ஆடைக்குள்ளே நான் வேண்டும்’*





இந்த வரிகளை தாண்டும் போதே அவனின் சில்மிஷங்கள் ஆரம்பித்து விட்டாலும், அவளுக்கு வரிகளிலே மயக்கம். காதலெனும் முடிவிலியில் கடிகார நேரம் கிடையாது என்ற இடத்தில் மயக்கம் கலைந்து சிலிர்ப்பை தர கேள்வியால் அவனை தட்டி விட்டாள்!

தாமரை!

இவன் பதில் சொன்னான் அவள் செவிகளை கடித்துக் கொண்டே!

எழும்புங்கோ காணும்! என்ற படியே மின்னலே தானே படம் என்ன?

ஓம்! அந்த படத்தில தான் ஹரிஸ் ஜெயராஜும் அறிமுகமானது. தாமரையும் அறிமுகமானது. தாமரையும் வாலியும் தான் பாட்டு எழுதினது.

ஆஆ! என்ற படி இவள் கேட்டுக்கொண்டிருக்க இவனோ,

இப்ப இதா உனக்கு வேணும்? என்னா குளிர் என்ற படி அவளை அணைக்க, ஹாரிஸிலிருந்து பிளேயர் ராஜாவுக்கு மாறியது.

**‘பனி விழும் இரவு நனைந்தது நிலவு**
**இளங்குயில் இரண்டு இசைக்கின்ற பொழுது**
**பூப்பூக்கும் ராப்போது பூங்காற்றும் தூங்காது**
**வா... வா... வா...’**

வாலியின் வரிகள் இவனுக்கு சாதகமாகி விட இன்னும் இறுக்கினான்.

**‘பூவிலே ஒரு பாய் போட்டு பனித்துளி தூங்க**
**பூவிழி இமை மூடாமல் பைங்கிளி ஏங்க’**

இவனை விட்டால் இந்த வரிகள் இங்கே கட்டில் காணும் என்று அவளுக்கு தெரியும்! அவளுக்கோ இப்பொழுது பேச்சு இன்பம் தேவையாக இருக்கிறது. அப்படியே அவனை கடிந்து தள்ளிவிட்டு, ரீமோட்டை எடுத்து பாடலை மாற்றினாள்.

**‘மார்கழி பூவே மார்கழி பூவே உன் மடி மேலே ஓர் இடம் வேண்டும்’**

இசைப்புயலின் சில்லிடும் இசை. அந்த பாடலை கேட்கும் போதே





உள்ளார குளிரும். வெளியில் கொட்டும் பனி போதாதென்று இசையிலும் குளிர்.

பாடல் குளிர்ந்தாலும், இவள் “மார்கழி” என்ற சொல்லை பிடித்துக்கொண்டாள்.

அப்பா! இந்த மாதங்களோட பேரில வாற பாட்டுக்கள் சொல்லுங்கோவன்?

அவளின் திடீர் கேள்வி உசுப்பி விட, அட! என்றிருந்தது அவளின் சிந்தனை வெட்டு.

எவ்வளவோ இருக்கேடி! அதிலையும் “மார்கழி”ல தான் நிறைய.

ஓமென்ன! என்ற படியே,

**‘மார்கழி திங்கள் அல்லவா மதி கொஞ்சும் நாள் அல்லவா இது கண்ணன் வரும் பொழுதல்லவா!’**

அவளே பாடினாள்.

இந்த பாட்டுக்கு முன்னால வருமே? மார்கழி திங்கள் மதி நிறைந்த நன்னாளாம் எண்டு! அது என்ன தெரியுமா?
என்ன? கண்களால் அவள் கேட்க,

**‘மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்**
**நீராடப் போதுவீர்! போதுமினோ, நேரிழையீர்!**
**சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்!**
**கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்,**
**ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்,**
**கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்**
**நாரா யணனே, நமக்கே பறைதருவான்,**
**பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய்’**

இது ஆண்டாள் பாடிய திருப்பாவை. கண்ணனோட பெருமைகளை ஆண்டாள் தோழிகளுக்கு சொல்வது போல வரும் முப்பது பாடல்களில் ஒன்று இது. இதை வச்சு தான் வைரமுத்து அந்த பாடல் எழுதினது.

ஓகோ! அதென்ன மார்கழிக்கு அப்படியொரு சிறப்பு?

குளிர் தான்! வேறயென்ன? சிரித்தான்.



கண்ணதாசன், காலங்களில் அவள் வசந்தம் எண்ட பாட்டில

**'மாதங்களில் அவள் மார்கழி'**

என்று எழுதியிருக்கிறாரே! அவ்வளவு குளிர்மை- உன்னை போல.

அந்த குளிரிலும் அவளுக்கு ஒரு " ஐஸ்" வைத்தான்.

அவள் ஒரு முறாய்பை வீச,

**'மார்கழி மாதத்து பனித்துளி அவளது குரலாகும்'**

முத்துக்குமாரின் இந்த வரிகள் இவளுக்கே எழுதி வைத்தது போல இருக்கும். இதில் உயர்வு நவிற்சி எதுவுமே இல்லை ஏன் உவமை என்பதே சற்று நெருடல் தான். அவள் குரலில் அப்படி ஒரு குளிர்மை. இதம் - பதம் - ஸ்வரம்.

அவனது புகழ்ச்சியில் உள்ளாரா சந்தோஷத்தாலும், "காணும் காணும்" என்று அவனை மீறிக்கொண்டே,

வேற மாதங்களில என்ன என்ன வரிகள் இருக்கு?

**'சித்திரை மாதம் மார்கழி ஆனது**
**வா நீ வா என் அதிசய பூவே வா**
**நீ வா நீ வா என் அழகிய தீவே வா'**

சித்திரை மாதம் மார்கழி ஆகிறதெண்டா என்ன அர்த்தம்?

நான்கு காலங்கள் இருக்கே! இளவேனில் காலம், கோடை காலம், இலையுதிர் காலம், குளிர் காலம். இளவேனில் என்றால் மிதமான சூடு. அது தான் வசந்த காலம். சித்திரை, வைகாசி மாதங்கள். குளிர்காலம் மார்கழி. தன் காதலியால சித்திரை மாதத்திலையே குளிருதாம்!


ஓஹோ! சித்திரை மாதத்தில வேற என்ன பாட்டு இருக்கு?

அடுத்த கேள்வியை தொடுத்தாள். அவளோ கேள்வி கேட்பதில் கெட்டிக்காரி. அது என்ன இது என்ன? ஏன்? எதற்கு? எப்படி? இப்படி குடைந்து கொண்டே இருப்பாள்! இப்பொழுது மாதங்களில் மதம் பிடித்திருக்கிறதே! விடுவாளா?

**'சித்திரை நிலவு சேலேயில் வந்தது முன்னே'**

இது புலமைப்பித்தன் வரி தானே என்ன?

யெஸ்! ரஹ்மானுக்கு அவர் எழுதின ஒரே பாட்டு!





வேற சித்திரை இருக்கா?

**‘ஏப்ரல் மாதத்தில் ஓர் அர்த்த ஜாமத்தில்
என் ஜன்னல் ஓரத்தில் நிலா நிலா’**

அடடே! ஏப்ரல் மாதத்தில் என்று ஒரு படமே வந்திச்சே! அதிலயும் இப்படி மாதங்களை வச்சு பாட்டிருக்கெல்லோ?

**‘கனவுகள் பூக்கும் ஆண்டுகள் தொடங்கும்
ஜனவரி மாதத்தில்
காதலை சொல்ல தேதிகள் உண்டு
பிப்ரவரி மாதத்தில்
தேர்வுகள் வந்து தொல்லை கொடுக்கும்
மார்ச் மாதத்தில் எல்லா
நாளும் விடுமுறை நாளே ஏப்ரல் மாதத்தில்’**

இதே தான்! பெப்ரவரில வேற?

தலைவர்ட ரொம்ப பேமஸான பாட்டே இருக்கே! என்ற படியே அவளை இறுக்கி அணைத்தான்.

**‘மாசி மாசம் ஆளான பொண்ணு
மாமன் எனக்குத்தானே’**

டேய்! விடுடா! மிச்ச மாதங்களில வாற பாட்டையும் சொல்லு!

இந்த முறை அவன் விடுவதாய் இல்லை! மிச்சத்தை நாளைக்கு சொல்லுறன் என்ற படியே அவளிடம் மச்சங்கள் தேட தொடங்கினான்!

**‘காமலீலா வினோதம்
காதல் கவிதா விலாசம்
படித்துப் படித்து எடுக்க எடுக்க’**

பஞ்சு அருணாசலத்தின் வரிகள் அவனுக்கு வழியை காட்ட ஜேசுதாஸின் கீர்த்தனை தொடர்ந்தது.

**‘ஆசை ஆஹா பிரமாதம்
மோக கவிதா பிரவாகம்
தொடுத்துத் தொடுத்து முடிக்க முடிக்க**

**கொடிதான் தவழுது தவழுது
பூப்போல் சிரிக்குது சிரிக்குது
உறவும் நெருங்குது நெருங்குது
உலகம் மயங்குது உறங்குது’**



ப. கிரிஜா



# முன்பள்ளிப்பருவ மாணவர்களது மொழித்தேட்டம்

## 1. அறிமுகம்

ஒரு குழந்தையின் மொழிவளமானது வாழும் சூழல் காரணிகளால் பெரிதும் ஆதிக்கம் செலுத்தப்படுகிறது. குழந்தை தாயின் கருவில் இருக்கின்ற ஏழாம் மாதத்தில் இருந்தே தாயின் குரலை நன்றாகக் கேட்கின்ற தன்மையைப் பெறுகின்றது. உயிரியல் மரபணுக் காரணிகள், பிள்ளை வளருகின்ற சூழலின் தனித்தன்மை ஆகியவற்றின் செல்வாக்கினால் ஒரு பிள்ளையின் வளர்ச்சியோடும் முதிர்ச்சியோடும் மொழித்தேட்டம் செம்மைப்படுத்தப்படுகின்றது. இங்கு மொழிவளத்தை உள்வாங்கும் செயற்பாடே மொழித்தேட்டம் ஆகின்றது.

பிறந்த குழந்தையின் படிப்படியான வளர்ச்சி நிலையோடு மொழியுடனான தொடர்பும் அதிகரித்துக்கொண்டு செல்கிறது. அதாவது ஒரு பிள்ளை ஆரம்பத்தில் பெற்றோர்களுடன் கொண்டுள்ள உறவும் அதன் பின் முன்பள்ளி மற்றும் சமூகத்துடனும் பெறுகின்ற பல அனுபவங்கள் ஊடாக மொழியைக் கற்றுக்கொள்கிறது. உடல் இயக்கம், மொழிக்கற்றல், அறிவாற்றல் திறன் என்பவற்றில் ஏற்படும் முன்னேற்றமானது பிள்ளை தொடர்ந்தும் சமூக மயமாக்கப்படுவதற்கும் பயிற்சி பெறுவதற்கும் அடிப்படையாக அமைகிறது. அந்தவகையில் முன் பள்ளிப்பருவமானது மாணவர்களுக்கு ஒரு வழிகாட்டியாகவும் வளர்ச்சியை ஊக்குவிப்பதாகவும் அமைகிறது. முன்பள்ளி மாணவர்களின் மொழித்தேட்டம் தொடர்பாக ஆசிரியர்களது வழிகாட்டுதல்கள் மற்றும் அவர்களினால் செயற்படுத்த ப்படுகின்ற கற்பித்தல் நுட்பங்களையும் மொழியியல் ஆய்வு முறையின் கீழ் ஆராய்தல் இவ் ஆய்வின் முக்கிய நோக்கமாகும்.





மேலும், முன்பள்ளிப் பருவ மாணவர்கள் மொழி தொடர்பாக எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனங்காணல், முதலாம் மொழித் தேட்டம், இரண்டாம் மொழித்தேட்டம் பற்றிய விடயங்களை அறிதல், முன்பள்ளிப்பருவ மாணவர்களது மொழித்தேட்டத்தில் பெற்றோரது பங்களிப்பு மற்றும் சமூகத்தின் செல்வாக்கு போன்றவற்றை மதிப்பிடல், முன்பள்ளியில் மொழி விருத்தியை முன்னெடுத்துச் செல்வதற்கு ஆசிரியர்களுக்கு உள்ள இடர்பாடுகளை அறிதல், முன்பள்ளி மாணவர்களின் மொழி விருத்திக்கு தடையாக அமையும் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை, ஆலோசனைகளை முன்வைத்தல், முன்பள்ளியில் மாணவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற மொழிவிருத்தி செயற்பாடுகள் அவர்கள் ஆரம்பக்கல்வியை முன்னெடுத்துச் செல்வதற்கு உதவியாய் அமைகின்றனவா என்பதை ஆராய்தல் போன்றவற்றையும் நோக்கங்களாகக் கொண்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

முன்பள்ளி மாணவர்களது மொழித்தேட்டம் தொடர்பாக ஆசிரியர்கள் பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றார்கள்.

அந்தவகையில் முன்பள்ளி மாணவர்களுக்கு மொழி தொடர்பான குறைபாடுகள் உள்ளதா, மாணவர்கள் மொழியை விருத்தி செய்து கொள்வதற்கு சூழல் செல்வாக்குச் செலுத்துகின்றதா, பெற்றோரது மனப்பாங்குகள் முன்பள்ளி மாணவரின் மொழிவிருத்தியுடன் கவனம் செலுத்தப்படுகின்றதா, ஆசிரியர்கள் மாணவர்களிடையே மொழித்திறன்களை வளர்ப்பதில் அக்கறை செலுத்துகின்றார்களா, ஆசிரியர்கள் முன்பள்ளி மாணவர்களை அடுத்தகட்டமான ஆரம்பக்கல்விக்குத் தேவையான மொழி ஆற்றலை வளர்க்கும் முகமாக மொழி கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்கின்றார்களா, வலிகாமப் பிரதேசத்து முன்பள்ளிப்பருவ மாணவர்களுக்கு தாய்மொழி மற்றும் இரண்டாம் மொழித் திறன்களை வளர்த்தெடுப்பதில் ஆசிரியர்கள் எவ்வகையான பிரச்சினைகளை எதிர்கொள்கிறார்கள்? இத்தகைய வினாக்களுக்கு விடை காண்பதாக இவ் ஆய்வு அமைந்துள்ளது. இவ்வகையில் இந்த ஆய்வின் ஆய்வுப்பிரதேசமானது இலங்கையின்





வடக்கே அமைந்துள்ள வலிகாம வலயத்தில் இயங்கி வருகின்ற முன்பள்ளிகளை அடிப்படையாகக் கொண்டது. இங்கு தமிழ் மொழியை தாய்மொழியாகக் கொண்ட மக்கள் வசிக்கின்றனர். ஆயினும் ஆங்கில மொழியின் முக்கியத்துவம் கருதி இரண்டாம் மொழியாக ஆங்கிலம் முன்பள்ளிப் பருவ காலங்களில் பயிற்றுவிக்கப்படுகிறது. எனவே இவ்வாறான சூழலில் கல்வி கற்கின்ற முன்பள்ளிப்பருவ மாணவர்களது மொழித்தேட்டமானது பிரயோக மொழியியல் அடிப்படையில் இங்கு அவதானிக்கப்படுகின்றது.

முன்பள்ளிப்பருவப் பிள்ளைகளை முறைசார் கற்றலிற்கு வழிநடத்திச் செல்வதற்கு உரிய அடிப்படை முன்பள்ளிப் பருவத்தில் இடம்பெற வேண்டியது அவசியமாகும். முறைசார் பாடசாலைக்கான முன்னாயத்தம் என்பது முன்பள்ளியில் மொழி ஊடாக மேற்கொள்ள வேண்டி இருப்பதால் அதற்குரிய திட்டங்கள் தயார்ப்படுத்தல்களும் முன்பள்ளி மாணவர்களுக்கு சாதகமான முறையில் பயணிப்பதற்கு பெற்றோர், ஆசிரியர்கள் மற்றும் சமூகம் என்பவற்றின் செயற்பாடுகள் ஆதரவளிப்பதும் அவசியமானதாகும். எனவே இவ் ஆய்வானது இத்தேவையினைக் கருத்திற் கொண்டு மேற்கொள்ளப்படுகிறது.

ஆராய்வோம்...

## வறட்சியின் கொடுமை கென்யாவில் பரிதாபம்

கென்யாவில் கடும் வறட்சியால் வனவிலங்குகள் பெரும் பாதிப்பை சந்தித்து வருகின்றன. இந்நிலையில் குடிக்க தண்ணீர் இன்றி 6 ஒட்டகச்சிவிங்கிகள் ஒரே இடத்தில் விழுந்து இறந்துள்ள புகைப்படம் சமூக ஊடகங்களில் வெளியாகி பார்ப்போரை கதிகலங்க வைத்துள்ளது. இதேவேளை கென்யாவின் கரிசா பிராந்தியத்தில் மேலும் 4000 ஒட்டகச்சிவிங்கிகள் அபாய நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஜீவா ஷஜீவனின்

# சிங்ககிரித்தலைவன்

**இதுவரை சிங்ககிரித்தலைவன் கதைக்களம் கடந்துவந்த வரலாற்றுப் பார்வை!**

வரலாற்றின் ஏடுகள் விரிகின்றன. பதினைந்து நூற்றாண்டுகள் பின் நோக்கிச் செல்கிறோம். அப்பொழுது ஈழத்தின் அரசனாய் விளங்கியவன் காசியப்பன். (477-524)

இவன் தன் மைத்துனனான மீகாரனின் தூண்டுதலாலும், மண்ணாசையாலும் தன் தந்தையை கொலை செய்தான் என்று வரலாறு இதனை வரலாறு காணாத மாபெருங் குரூரச் செயலாகப்பதிவு செய்கிறது!

சூளவம்சம் முதலான பண்டைய நூல்கள், இவனை ஓர் அரக்கனாகச் சித்திரிக்கின்றன. எனினும், காசியப்பனின் ஒரு செயல், அவனுடைய கொடுமைகளையெல்லாம் மறக்குமாறு செய்கிறது. சிகிரியாவை இராசதானியாக்கி, அதனைக் கலைக் கோயில் ஆக்கிய தலைவன் அவன்! தனது அறியாமையால் செய்த செயல்களை நினைந்து, நினைந்து வருந்தி வருந்திச் சாகாது செத்துக்கொண்டிருந்த அவன், எமது இரக்கத்திற்கு உரியவனே!

“அவன் பல தெய்வப் படிமங்களையும், அன்னசத்திரங்களையும், இவை போன்ற பலவற்றையும் அமைத்தான், ஆனால் இனிவரும் ஓர் உலகிற்காய் அஞ்சியே வாழ்ந்தான். (He made many images, alms houses and the ike, but he lived in fear of the world to come' Culavansa) என்கிறது சூளவம்சம்!

காசியப்பன் தாது சேனனின் மகனாயினும் பட்ட மகிஷியின் வயிற்றிலே பிறந்தவன் அல்லன். மூத்தவன் எனினும் கீழ்மகள் ஒருத்திக்கு மகனாய்ப் பிறந்தான்.

He (Dhatusena) had two sons> Kassapa the elder, by a consort of lesser degree and Mogallana by the consecreted mahesi a n d a daughter'. - A concise history of Ceylon.

பட்டமகிஷியின் வயிற்றிலே பிறந்த முகலானன் என்னும் ஒரு தம்பியும், தங்கை ஒருத்தியும் இவனுக்கு உளர். எனவே,

மூத்தவனாய்ப் பிறந்தும் அரசியல் உரிமை கிடைக்காமையாலும், காமக்கிழத்தி மகன் என்ற தாழ்வு மனப்பான்மையாலும், இவன், தந்தையாகிய தாதுசேனனுக்கு மரண தூதாய் ஆனது!

இந்த முயற்சியிலே சேனாபதியும், காசியப்பனுக்கு மைத்துனன் முறையானவனுமாகிய மீகாரன், அவனைத் தூண்டிக் கொண்டே இருந்தான். இவ்வாறு தூண்டு வதற்கு மீகாரனுக்கு ஒரு காரணமும் இருந்தது. அதாவது,
தாதுசேனன், தன் மகளை மீகாரனுக்கு மணம் செய்வித்திருந்தான்.

ஒரு நாள் கணவனுக்கும் மனைவிக்கும் இடையே சிறு சச்சரவு நிகழ்ந்தது. அச்சச்சரவால் கோபமுற்ற மீகாரன், தன் மனைவியைச் சவுக்கால் அடித்தான். மனைவியோ தான் அரசன் மகள் என்ற கர்வத்தாற்போலும் தந்தையிடம், இரத்தம் தோய்ந்த தன் ஆடையோடு சென்று முறையிட்டாள்.

தாதுசேனனின் வெகுளி எல்லை கடக்கவே, அவன் கொடிய விலங்கு போலானான் தன் சொந்தச் சகோ தரி என்றும் நோக்காது, மீகாரனின் தாயை, நிருவாண மாக உயிரோடு தீயில் இட்டு எரித்தான்! மருமகன் மீது எத்தகைய பழிவாங்கல்!

இதை மீகாரன் மன்னிக்கவேயில்லை! அவன் தாது சேனனின் கேள்போற் பகையானான். முன்னரே மண்ணாசை கொண்டு திரிந்த காசியப்பனின் ஆசைத் தீக்கு நெய் வார்ப்பதே மீகாரன் தொழிலாயிற்று.

அவன் தன் முயற்சியில் வெற்றிபெற்றான். காசியப்பனும் ஈழத்தின் அரசனானான்! அவனுடைய அரியணை, தாதுசேனனின் சமாதியின் மீது எழுந்தது!

தன் கனவுக் கோட்டையாகியச் சிங்ககிரியை வசிப்பிடமாக்க, ஏற்பாடுகளோடு அங்கு சென்ற காசியப்பனுக்கு பல ஆச்சரியங்கள் காத்திருந்தன!

தம்பி முகலனோ மகாநாமரோடு தமிழகம் தப்பிச்செல்கிறான்!

**இனி கதை தொடரும்...!**



எஸ்.எஸ்.நுஜன்



# மீண்டும் ஒருமுறை சாம்பியனான யாழ்ப்பாணம்

2012 இல் சிறி லங்கா பிரீமியர் லீக் (SLPL) என ஆரம்பிக்கப்பட்ட டி20 தொடரில் ஊவா அணி சாம்பியனானது. அதன் பின் இது தொடர் இடம்பெறவில்லை. பின்னர் 2020 இல் லங்கா பிரீமியர் லீக் (LPL) என்ற பெயரில் மீண்டும் ஆரம்பிக்கப் பட்ட போது யாழ்ப்பாணத்தை பிரதிநிதித்துவம் செய்து களமாடிய ஜப்னா ஸ்ரேலின்ஸ் (Jaffna Stallions) அணி வெற்றியாளர் ஆனார்கள். எல்பிஎல் இன் இந்த வருடத்திற்க்கான தொடர் கடந்த டிசம்பர் 5ம் திகதி ஆரம்பமானது.

ஐந்து அணிகளும் குழு நிலையில் தமக்கிடையே தலா இரு போட்டிகள் வீதம் எட்டு போட்டிகளில் விளையாடி இருந்தனர். பின் முதல் நான்கு இடங்களை பெற்ற ஜப்னா கிங்ஸ், காலி கிளாடியேட்டர்ஸ், கொழும்பு ஸ்டார்ஸ் மற்றும் தம்புள்ள கென்ட்ஸ் ஆகிய அணிகள் பிளே ஆப் சுற்றில் மோதினர். 2020 ஐ போன்று இம்முறையும் காலி மற்றும் ஜப்னா அணிகள் இறுதி போட்டியில் பலப் பரீட்சை நடத்தினர். இவ்வருடம் காலி க்கு எதிராக விளையாடிய மூன்று போட்டியிலும் தோற்ற ஜப்னா, இப்போட்டியில் வென்று 2021 LPL தொடரின் வெற்றியாளர்கள் ஆனார்கள்.

கொழும்பு, யாழ்ப்பாணம், கண்டி மற்றும் தம்புள்ள நகரங்களை கடந்த வருடம் பிரதிநிதித்துவம் செய்த கொழும்பு கிங்ஸ், ஜப்னா ஸ்ரேலின்ஸ், கண்டி தாஸ்கர்ஸ் மற்றும் தம்புள்ள வீக்கிங் அணிகளின் உரிமையாளர் மாற்றத்தோடு அவற்றின் பெயர்களும் கொழும்பு ஸ்டார்ஸ், ஜப்னா கிங்ஸ்,



கண்டி வாரியர்ஸ் மற்றும் தம்புள்ள கென்ட்ஸ் என்று மாற்றப்பட்டு இருந்தது குறிப்பிடத்தக்கது.

இத்தொடரில் அதிக ரன்கள் குவிக்கப்பட்ட போட்டியாக 397 ரன்கள் எடுக்கப்பட்ட கிங்ஸ் மற்றும் கென்ட்ஸ் மோதிய போட்டி இருந்தது. தொடரில் அதிக ரன்கள் எடுத்தவர்களில் குஷால் மெண்டிஸ் முன்னிலை பெற அடுத்த இடத்தில் தொடரின் ஆட்ட நாயகனாக தேர்வு செய்யப்பட்ட அவிஸ்க்கா





பெர்னாண்டோ உள்ளார். அதிக விக்கெட்கள் வீழ்த்தியவராக சமித் படேல் மற்றும் மகேஷ் தீக்ஷண ஆகியோர் தலா 16 விக்கெட்கள் வீழ்த்தியுள்ளனர். ஒரு இன்னிங்ஸ் இல் அதிக ரன் எடுத்த பெறுதியாக அவிஸ்க்கா இன் 100 ரன்கள் உள்ளது. ஒரு இன்னிங்ஸ் இன் சிறந்த பந்து வீச்சு பெறுதியாக ஜெவரி வண்டெர்சய் இன் 25 ரன்களுக்கு 6 விக்கெட்கள் எடுத்த பெறுதி உள்ளது.

**Most wickets**

| Player | Mat | Inns | Overs | Mdns | Runs | Wkts | BBI | Ave | Econ | SR |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| SR Patel (Galle Gladiators) | 10 | 10 | 38.0 | 0 | 219 | **16** | 3/13 | 13.68 | 5.76 | 14.2 |
| M Theekshana (Jaffna Kings) | 10 | 10 | 39.0 | 1 | 268 | **16** | 4/25 | 16.75 | 6.87 | 14.6 |
| JNT Seales (Jaffna Kings) | 7 | 6 | 20.2 | 2 | 159 | **15** | 4/13 | 10.60 | 7.81 | 8.1 |
| Imran Tahir (Dambulla Giants) | 10 | 9 | 35.0 | 0 | 210 | **15** | 3/20 | 14.00 | 6.00 | 14.0 |
| S Prasanna (Colombo Stars) | 8 | 8 | 31.0 | 0 | 203 | **13** | 3/31 | 15.61 | 6.54 | 14.3 |
| PVD Chameera (Colombo Stars) | 9 | 9 | 30.0 | 0 | 267 | **13** | 4/35 | 20.53 | 8.90 | 13.8 |
| N Thushara (Galle Gladiators) | 8 | 8 | 23.4 | 0 | 192 | **12** | 5/13 | 16.00 | 8.11 | 11.8 |
| JDF Vandersay (Colombo Stars) | 4 | 4 | 16.0 | 1 | 117 | **11** | 6/25 | 10.63 | 7.31 | 8.7 |
| PWH de Silva (Jaffna Kings) | 10 | 10 | 36.0 | 1 | 245 | **11** | 3/16 | 22.27 | 6.80 | 19.6 |

**Most runs**

| Player | Mat | Inns | NO | Runs | HS | Ave | BF | SR | 100 | 50 | 0 | 4s | 6s |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| BKG Mendis (Galle Gladiators) | 10 | 10 | 1 | **327** | 85 | 36.33 | 220 | 148.63 | 0 | 2 | 0 | 32 | 9 |
| WIA Fernando (Jaffna Kings) | 10 | 10 | 1 | **312** | 100 | 34.66 | 204 | 152.94 | 1 | 2 | 0 | 26 | 19 |
| PD Salt (Dambulla Giants) | 10 | 10 | 0 | **301** | 64 | 30.10 | 195 | 154.35 | 0 | 2 | 0 | 32 | 10 |
| T Kohler-Cadmore (Jaffna Kings) | 11 | 11 | 2 | **296** | 92 | 32.88 | 216 | 137.03 | 0 | 2 | 1 | 19 | 20 |
| LD Chandimal (Colombo Stars) | 9 | 9 | 3 | **277** | 65* | 46.16 | 184 | 150.54 | 0 | 1 | 0 | 22 | 11 |
| MD Gunathilaka (Galle Gladiators) | 10 | 10 | 1 | **226** | 55 | 25.11 | 174 | 129.88 | 0 | 2 | 0 | 26 | 7 |
| Rahmanullah Gurbaz (Jaffna Kings) | 8 | 8 | 0 | **207** | 70 | 25.87 | 143 | 144.75 | 0 | 2 | 1 | 18 | 11 |

**High scores**

| Player | Runs | Balls | 4s | 6s | SR | Team | Opposition |
|---|---|---|---|---|---|---|---|
| WIA Fernando | **100** | 64 | 10 | 4 | 156.25 | Jaffna Kings | v Giants |
| T Kohler-Cadmore | **92** | 55 | 5 | 8 | 167.27 | Jaffna Kings | v Stars |
| BKG Mendis | **85** | 53 | 7 | 4 | 160.37 | Gladiators | v Jaffna Kings |
| C Karunaratne | **75*** | 47 | 10 | 2 | 159.57 | Giants | v Jaffna Kings |
| AD Mathews | **73** | 57 | 8 | 3 | 128.07 | Stars | v Gladiators |
| Rahmanullah Gurbaz | **70** | 40 | 5 | 4 | 175.00 | Jaffna Kings | v Giants |
| LD Chandimal | **65*** | 40 | 4 | 3 | 162.50 | Stars | v Giants |
| PD Salt | **64** | 27 | 4 | 5 | 237.03 | Giants | v Warriors |
| BKG Mendis | **64** | 39 | 7 | 1 | 164.10 | Gladiators | v Stars |

**Best bowling figures in an innings**

| Player | Overs | Mdns | Runs | Wkts | Econ | Team | Opposition |
|---|---|---|---|---|---|---|---|
| JDF Vandersay | 4.0 | 1 | 25 | **6** | 6.25 | Stars | v Warriors |
| N Thushara | 3.5 | 0 | 13 | **5** | 3.39 | Gladiators | v Jaffna Kings |
| JNT Seales | 2.5 | 1 | 13 | **4** | 4.58 | Jaffna Kings | v Stars |
| PC de Silva | 4.0 | 1 | 16 | **4** | 4.00 | Jaffna Kings | v Giants |
| M Theekshana | 4.0 | 0 | 25 | **4** | 6.25 | Jaffna Kings | v Stars |
| Wahab Riaz | 3.5 | 0 | 26 | **4** | 6.78 | Jaffna Kings | v Stars |
| PVD Chameera | 4.0 | 0 | 35 | **4** | 8.75 | Stars | v Warriors |